பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 16 திங்கட்கிழமை (01-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:342

# 'ஒஸ்லோ பிரகடனம்' என்பது வெறும் அறிக்கை மட்டும்தான்!

## நோர்வே கூறுகின்றது

கொழும்பு,நவம்பர் 1

**'ஒஸ்லோ பிரகடனம்' என்று கூறப்படுவது ஒரு பிரகடனமே அல்ல. அது வெறுமனே ஓர் அறிக்கை மட்டுமே.**

**- இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வே இவ்வாறு தெரிவித்திருக்கின்றது.**

நோர்வேயின் சார்பில் கொழும்பில் உள்ள அதன் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ரொம் நப்ஸ்கொக் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

"ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற சாரப்படத் தென்னிலங்கையில் செய்திகள் வெளியாகி வரும் பின்னணியிலேயே இது குறித்து அவரிடம் கேட்டோம்.

"இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் விரிவான முறையில் நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் பேச்சின் இறுதியில் வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை அறிக்கையே அது. அது பிரகடனம் அல்ல; ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை.

"ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பு முறையில் ஒரு தீர்வை எட்டமுடியுமா என்பதைக் கண்டறிவதற்கு இரு தரப்பும் இணங்கியுள்ளன என்று மட்டுமே அந்த அறிக்கை கூறுகின்றது. அதற்காக, சுதந்திரத் தனிநாடு கோரும் உரிமையைத் தாங்கள் கைவிட்டுவிட்டனர் என்று புலிகள் அதில் கூறவுமில்லை. அப்படி அர்த்தம் கொள்ளவும் முடியாது" - என்றும் நோர்வேத் தூதரக இரண்டாவது செயலாளர் கூறினார்.

மேற்படி மூன்றாவது சுற்றுப் பேச்சின் முடிவில் - ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்புக்குள் - தீர்வு ஒன்றைக் காணும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தளபதி ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

கொழும்பு,நவ.1

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நிர்மல் சந்தர் விஜ் இன்று இலங்கை இராணுவத் தளபதியை சந்திக்கின்றார். இராணுவத் தலைமையகத்தில் அவருக்கு பிற்பகல் 2 மணிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்தப்படவுள்ளது.

மாலை 4மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்திப்பார். நாளை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பாதுகாப்புப் பிரதியமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, கடற்படைத் தளபதி, விமானப் படைத் தளபதி ஆகியோரையும் சந்திப்பார். இந்தியாவில் ஆறு இராணுவப் படைப்பிரிவின் சுமார் 18 லட்சம் படைகளுக்கு தலைமைதாங்கும் ஜெனரல் விஜ்ஜின் இலங்கை விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இலங்கையின் பாதுகாப்பு, பிராந்தியத்தில் இந்திய - இலங்கைப் படைகளின் கூட்டு நடவடிக்கை போன்ற விடயங்கள் பற்றி இவர் கலந்துரையாடுவபர். (ஐ-4)

## கருணா குழுவினர் 6 பேர் பற்றி தகவல் கோருகின்றனர் புலிகள்

மட்டக்களப்பு,நவ.1

கருணா குழுவைச் சேர்ந்த ஆறு பேர் தொடர்பான தகவல்களைத் தந்துதவுமாறு விடுதலைப் புலிகள் பொதுமக்களிடம் கேட்டிருக்கின்றனர்.

இது தொடர்பான பிரசுரங்களை புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியல்துறை வெளியிட்டிருக்கின்றது.

இந்த 6 பேரின் புகைப்படங்களுடன் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன; பொது இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

சின்னத்தம்பி, மார்க்கன், மங்களன், இனிய பாரதி, உருத்திரா, பிள்ளையான் ஆகியோர் தொடர்பான விவரங்களே வெளியிடப்பட்டுள்ளன.

எம்முடன் சண்டையிட்டு வலுவிழந்த துரோகிகள் இராணுவத்துடன் இணைந்து மண்ணை நேசிக்கும் மக்களை கோழைத்தனமான முறை

(16ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களில் இந்தியா எந்த வகையில் தலையிடலாம் என்பது தொடர்பாக ஆராய்வதற்காகக் கடந்த சனியன்று புதுடில்லியில் கூட்டப்பட்ட மாநாட்டில் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, சட்டத்தரணி எஸ்.சந்திரகாசன், டாக்டர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் ஒன்றாகக் காணப்படுகின்றனர்.

### படையினர் மற்றும் பொலீஸார் புரியும்

## உரிமை மீறல்கள் பற்றித் தகவல் தந்தால் உரிய நடவடிக்கை

### யாழ். வந்த ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் மற்றும் பொலீஸாரால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆதாரபூர்வமான தகவல்கள் தந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி என்.செல்வக்குமரன்.

இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு யாழ்.குடாநாட்டிற்கு வருகை தந்த ஆணையாளர் நேற்றுக்காலை யாழ்.குடாநாட்டு செய்தியாளர்களைச் சந்தித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளித்தார்.

அப்பொழுதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டுக்குள் முற்றுகிறது குழப்பம்

## ஸ்ரீல.சு.க.-ஜே.வி.பி. தேனிலவு முடிகிறது?

### விமலுக்கு எதிராக டிலான் போர்க்கொடி

கொழும்பு,நவ.1

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பியினருக்கும் இடையிலான முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நிந்தித்தும், அவரது நிறைவேற்று அதிகார நிலைமையைக் கிண்டல் அடித்தும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ பகிரங்கமாக வெளியிட்ட கருத்துகளே இந்த மோதலுக்கு எண்ணெய் ஊற்றுவதாக அமைந்துவிட்டன.

ஸ்ரீல.சு.கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், பிரதி அமைச்சருமான டிலான் பெரேரா தலைமையிலான இளைஞர் அணியினரே விமல் வீரவன்ஸவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி உள்ளனர். புலிகளுக்கு எதிரான அமைப்புகளால் ஒன்றிணைந்து உருவாக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்டு

## பணயக்கைதியான இலங்கைத் தமிழரை விடுவிக்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை

### விசேட பிரதிநிதி ஒருவர் நியமிப்பு



ஈராக்கில் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்ட 'டிரக்' சாரதி தினேஷ் இராஜரட்ணம் மற்றும் அவரது மனைவி.

கொழும்பு,நவ.1

ஈராக்கியத் தீவிரவாதிகளால் பணயக்கைதியாகப் பிடிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஷ் தர்மேந்திரா இராஜரட்ணத்தை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சு விசேட பிரதிநிதியொருவரை நியமித்துள்ளது. பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை குவைத்தில் இருந்து ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தளமொன்றுக்கு உணவுப் பொருள்களைக் கனரக வாகனத்தில் ஏற்றிச்சென்றபோது இலங்கைத் தமிழ்ச்சாரதி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அன்சருள் சுன்னா என்று அழைக்கப்படும் தீவிரவாத அமைப்பே தினேஷ் தர்மேந்திரா இராஜரட்ணத்தைப் பணயக் கைதியாகப் பிடித்துச் சென்றுள்ளது என்று கூறப்படுகிறது.

தர்மேந்திரா இராஜரட்ணம் கொழும்பு வத்தளையைச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் இன்று வன்னி திரும்புகிறார்

### உடன் அகாஷியுடன் சந்திப்பு

ஜெனீவா,நவ.1

ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று வன்னி திரும்புகிறார்.

அதிகாலையில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் தமிழ்ச்செல்வன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் அவர்களது உதவியாளர்கள், காலை 8 மணிக்கு விமானப் படை ஹெலியில் கிளிநொச்சி செல்வர்.

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி காலை 10 மணிக்கு கிளிநொச்சியை வந்தடைவார். 11 மணியளவில் அவர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப்பேச்சு நடத்துவார்.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த புலிகளின் அரசியல் விவகாரக் குழுவில் அங்கம்வகித்த ஏனைய தலைவர்கள் ஏற்கனவே வன்னி திரும்பிவிட்டனர் என்பது தெரிந்ததே. (ஐ-க-13-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் வருடும் இனிய நாளிதழ்




பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாக யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'மத்தியின் சொற் போர்க்களம்' விவாதச் சுற்றுப்போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

## அரசுக்கெதிராக பதுளை நகரில் ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

வாழ்க்கைச் செலவு உயர்வைக் கண்டித்தும், சம்பள உயர்வை வழங்கக்கோரியும், சமாதானப் பேச்சை உடன் ஆரம்பிக்க வலியுறுத்தியும் அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி நாடு முழுவதும் மேற்கொண்டுவரும் எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று பதுளையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பதுளை பஸ்தரிப்பு நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் வாழ்க்கைச் செலவு குறைக்கப்படவேண்டும் என்றும் இனப் பிரச்சினை உட்பட முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

இப்போராட்டத்திற்கு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் செனவிரத்ன, ரவீந்திர சமரவீர ஆகியோர் தலைமை தாங்கினர். நூற்றுக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.(ஜ)

# விவாதச்சுற்றுப் போட்டியில் மத்திய கல்லூரி முதலிடம்

யாழ்ப்பாணம்,நவ.1

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். மத்திய கல்லூரி மாணவன் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாக எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி நடத்தப்பட்ட 'மத்தியின் சொற்போர்க்களம்' விவாதச் சுற்றுப் போட்டியில் முதலிடத்தை யாழ்.மத்திய கல்லூரி வென்றது.

விவாதச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் காலை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இறுதிப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக 'முன்னாள் கல்விப்பணிப்பாளர் அல்பிரட்டும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற நீதிபதியும் பதில் நீதிவானுமாகிய மு.திருநாவுக்கரசு, தமிழீழக் கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண மாஸ்ரர், யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் என்.வரதராசா, யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை ஆகியோரும் கலந்துகொண்டனர். இப்போட்டியில் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த 20 பாடசாலைகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்று முதலிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும் மூன்றாமிடத்தை வேம்படி உயர்தரப் பாடசாலையும் வென்றன. (4-7)

# காத்தான்குடியில் மதக் கலவரம்; ஊரடங்கு உத்தரவு அமுலுக்கு!

காத்தான்குடி,நவ.1

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் நேற்றுத் திடீரென வெடித்த மதக் கலவரங்கள் காரணமாக சுமார் ஆறு மணித்தியாலங்களுக்கு மேல் ஊர் அல்லோலகல்லோலப்பட்டது.

காத்தான்குடிப் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக நேற்றிரவு 7 மணிமுதல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஜம் இய்யத்துல் உலமா சபையால் புறக்கணிக்கப்பட்ட இஸ்லாமிய குழு ஒன்றை இலக்குவைத்தே தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

தரீக்கத்துல் முப்லீஹீன் என்ற வணக்க பீடம், அந்த வணக்க பீடத்தைப் பின்பற்றுவோரின் வீடுகள், கட்டடங்கள் என்பன அடித்து நொறுக்கப்பட்டன. சில தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

அந்த வணக்க பீடத்தின் செயற்பாடுகள் நடைபெறும் இடங்கள், அதைப் பின்பற்றுவோரின் சொத்துக்கள் என்பன அழிக்கப்பட்டன.

சில வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டன என முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

முஸ்லிம் ஒருவர் வெட்டப்பட்டதை அடுத்தே கலவரம் வெடித்ததாகக் கூறப்பட்டது. இக்கலவரம் காரணமாக இப்பகுதி வர்த்தக நிலையங்கள் யாவும் இழுத்து மூடப்பட்டன. (ஐ-க)

## வீதியில் பாரிய குழிகள் போக்குவரத்தில் சிரமம்

தென்மராட்சி,நவ.1

சாவகச்சேரி - கச்சாய் வீதியிலும் கொடிகாமம் - கச்சாய் வீதியிலும் பாரிய"குழிகள் காணப்படுவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் அல்லாரை வயலூடாகச் செல்லும் வீதியிலும் -

கொடிகாமம் - கச்சாய் வீதியின் பல இடங்களிலும் ஏற்பட்டுள்ள குழிகளால் பாதசாரிகள் தொடக்கம் வாகனங்களில் செல்வோரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதியில் ஓர் அடி ஆழம் வரை இக்குழிகள் காணப்படுவதாகவும் மழைவெள்ளம் இக்குழிகளுள் நிறைந்துள்ளதால் இவ்வீதியூடாகச் சிற்றூர்திகளில் செல்ல அச்சம் தெரிவிப்பதால் தொடர்ந்து பயணம் செய்யமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# இலங்கையும் ஓர் எதியோப்பியாவாக மாறும்; அமெரிக்கர் ஆலோசனை அதற்கே உதவும்

## எச்சரிக்கிறார் பந்துல குணவர்த்தன எம்.பி.

கொழும்பு,நவ.1

இன்றைய அரசு இலங்கையை ஓர் எதியோப்பியாவாகவும், ஆர்ஜென்ரீனாவாகவும் மாற்றியமைக்கப் போகிறது. மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குப் பொருளாதார ஆலோசனைகளை வழங்கிய அமெரிக்கர் ஒருவரின் ஆலோசனையுடனேயே நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இந்த அரசின் வரவு - செல்வுத் திட்டத்தைத் தயாரித்துள்ளார்.

- முன்னாள் அமைச்சரும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான பந்துல குணவர்த்தன இவ்வாறு எச்சரிக்கை விடுக்கிறார்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசிடம் உறுதியான பொருளாதாரக் கொள்கை இல்லை. வரவு - செல்வுத்திட்டத்தைத் தயாரிப்பதிலும் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கூட்டாளிகளான ஜே.வி.பியினர் உலகவங்கியினதோ, வெளிநாடுகளினதோ தலையீடுகளின்றி சுயேச்சையாகத் தயாரிக்கப்பட்ட ஒரு வரவு - செலவுத்திட்டதை மக்கள் முன்வைப்போம் என்று பிரசாரம் செய்கின்றனர்.

ஆனால், நிதி அமைச்சரோ அமெரிக்க ஆலோசகரான ஜீ.யூ.எஸ். கெப்பனிக் என்பவரை அழைத்துவந்து அவருடைய ஆலோசனைகள் பெறப்பட்டது என்கிறார். நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் இணைந்து பாரிய பொருளாதார அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளார் என்று கூறுகின்றார்.

இந்த 90 வயதான அமெரிக்க ஆலோசகருக்கு நாள் ஒன்றுக்கு 67,600 ரூபா சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. இவர் ஒரு மாத காலமாக இங்கு தங்கியிருந்து ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந்த அமெரிக்க ஆலோசகர் ஆரம்பத்தில் ஓர் இராணுவ அதிகாரியாகவே சேவையில் சேர்ந்தார். பின் படிப்படியாக நிதிச் சேவையில் இணைந்துகொண்டார். இவர்தான் பங்களாதேஷ், எதியோப்பியா, ஆர்ஜென்ரீனா போன்ற நாடுகளுக்குப் பொருளாதார ஆலோசனைகளை வழங்கியவர்.

இவருடைய ஆலோசனையின்படி செயற்பட்ட ஆர்ஜென்ரீனாவும், எதயோப்பியாவும் இன்று பஞ்சத்தின் உச்சிக்கே போய்விட்டன என்பது உலகறிந்த உண்மை. அந்த நிலைதான் இலங்கைக்கும் ஏற்படும் என்று பந்துல குணவர்த்தன எச்சரிக்கை விடுத்தார்.

எங்களுடைய அரசு ஆட்சியில் இருந்த வேளை உலக சந்தையில் எரிபொருள்களின விலைகள் அதிகரித்தபோது நாம் மக்கள் மீது அந்தச் சுமையை ஏற்றி வைக்கவில்லை. ஆனால், அம்மையாரின் முன்னைய ஆட்சியில்(2000-2001) உலக சந்தையில் எண்ணெய் விலை 15 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஆனால், ஜனாதிபதி டீசலின் விலையை இரண்டு ரூபாவால் அதிகரித்தார்.

அடுத்த வாரமளவில் எரிபொருள்களின் விலை மேலும் நான்கு ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. இதனால், வாழ்க்கைச்செலவு மேலும் பன்மடங்காக அதிகரிக்கும். எனவே, அரசு தற்காலிகமாகவாவது எிபொருள்கள் மீதான வியைரத்துச்செய்து நியாயமான விலையில் எரிபொருள்களை வழங்கவேண்டும் எனவும் பந்துல குணவர்த்தன கோரினார். (ஐ-க)

# தேர்தல் திகதியை தீர்மானிப்பவர் அதன் ஆணையாளர் மட்டுமே!

## மங்களவுக்கு என்ன தெரியும் என்கிறார் ஜோசப் பெரேரா

கொழும்பு,நவ.1

ஜனாதிபதித் தேர்தல் நடத்தும் திகதியைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கே உண்டு. ஜனாதிபதிக்கோ, மங்கள சமரவீரவுக்கோ அந்த அதிகாரம் கிடையாது.

- இப்படி அடித்துக் கூறுகின்றார் முன்னாள் சபாநாயகரும், ஐ.தே.க கம்பஹா மாவட்ட எம்.பியுமான ஜோசப் மைக்கல் பெரேரா.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களாக அமைச்சர் மங்கள சமரவீர தனது தகுதிக்கும் அறிவுக்கும் எட்டாத விடயங்களில் தலையிடுகின்றார்.

"ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டின் இறுதியிலேயே முடிவடையும். அதன் பின்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்துவோம்" என்று கூறும் மங்கள சமரவீரவுக்கு அரசமைப்பைப் பற்றி என்ன தெரியும்?

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடங்கள் மட்டுமே என்பதை அரசமைப்பு திட்டவட்டமாகக் கூறுகின்றது. இதன்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டில் பூர்த்தியடைகின்றது. அதன் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டியது தேர்தல் ஆணையாளரின் கடமை.

தேர்தல் ஆணையாளரின் கடமைகளிலும், உரிமைகளிலும் எவரும் தலையிடமுடியாது. அரசமைப்பின்படி தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. - என மைக்கல் ஜோசப் பெரேரா கூறினார். (ஐ-க)

## வேலணையில் அஞ்சலி நிகழ்வு

மண்டைதீவு,நவ.1

வடமராட்சியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தின்போது மரணமடைந்த தீவகக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபால வாணிதாசனின் அஞ்சலி நிகழ்வு நாளை செவ்வாயக் கிழமை காலை 10 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

தவகக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தீவக அரசியல்துறையினர் ஆகியோர் நினைவுரைகளினை ஆற்றவுள்ளனர். (3-88-203)

## நள்ளிரவில் கடை உடைத்துத் திருட்டு

வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் நள்ளிரவு வேளையில் எல்வ் ரக வாகனத்தில் வந்த சிலரால் கடைகளின் பூட்டு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12.30 மணியளவில் எல்வ் வாகனத்தில் வந்த சிலர் பான்சி கடை ஒன்றையும் பலசரக்குக் கடை ஒன்றையும் உடைத்து அங்கிருந்த பொருள்களைப் பொதி செய்துகொண்டிருந்தவேளை அயலவர்கள் உஷாரடைந்ததால் அகப்பட்ட பொருள்களோடு தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (3-161)

**பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்து**

# யாழ். மத்திய கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி இறுதிப் போட்டிகளில் வெற்றியீட்டின!

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ். மத்திய கல்லூரி பொன். விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நேற்றுமுன்தினம் நடத்திய கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளில் யாழ். மத்திய கல்லூரியும் உடுவில் மகளிர் கல்லூரியும் சம்பியனாகின.

மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் போட்டிகள் நடைபெற்றன. பெண்களுக்கான இறுதிப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதின. இதில் 33:30 என்ற கணக்கில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றியீட்டியது.

ஆண்களுக்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும் யாழ். இந்துக் கல்லூரியும் மோதின. இதில் 29:22 என்ற கணக்கில் யாழ். மத்திய கல்லூரி வெற்றியீட்டியது.

இப்போட்டி நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எஸ்.எழிலன்பன், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், தகுதி பெற்ற கண்பரிசோதனையாளர் எஸ்.எம்.பெர்னாண்டோ, மத்திய கல்லூரியின் [illegible] சங்கச் செயலாளர் [illegible] ஆகியோரும் கலந்துகொண்டனர். (10)

# மட்டு. வாவியில் திடீரெனத் திரண்ட ஆயிரக்கணக்கான பாம்புகளால் பரபரப்பு

மட்டக்களப்பு வாவியில் திடீரெனப் பிரவேசித்த ஆயிரக்கணக்கான பாம்புகளால் சுமார் 3 மணி நேரம் அப்பிரதேசம் பெரும் அல்லோலகல்லோலப்பட்டது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் இரவு 7 மணியளவில் மட்டக்களப்பு, கல்லடிப்பாலத்தின் [illegible] வாவியின் மேல் ஆயிரக்கணக்கான தண்ணீர்ப்பாம்புகள் நெளிய ஆரம்பித்தன. தண்ணீர் தெரியாத அளவுக்கு மிகப்பெருமளவில் பாம்புகள் நீரின் மேல் புரண்டன.

பொலீஸாரின் தகவலையடுத்து அந்த இடத்திற்கு விரைந்த மட்டக்களப்பு மாவட்ட தலைமையக பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹரிச்சந்திர பண்டார ஊடகவியலாளர்களை அழைத்துப் பாம்புகளைக் காண்பித்தார்.

இரவு 10 மணியாகியும் அப்பாம்புகள் நீரின் மேல் நெளிந்த வண்ணமே இருந்தன. பெருமளவிலான பொதுமக்கள் பெரும் ஆச்சரியத்துடன் இப்பாம்புகளைப் பார்வையிட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# ஜனாதிபதி குமாரதுங்க முன்னெடுக்கும் நகர்வுகள்

ஜனாதிபதியின் பதவிக்காலம் எதுவரை என்ற சட்ட விவாதத்தில் தமக்குச் சார்பான நிலைப்பாட்டில் வியாக்கியானம் கிடைப்பதற்கும்-

அரசமைப்பைத் தனது குறுகிய அரசியல் லாபங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைப்பதற்கும் -

தேர்தல் ஆணைக்குழு போன்றவற்றைத் தனக்கு இசைந்த வகையில் நிறுவுவதற்கும் -

உரிய ஏற்பாடுகளை - ஆயத்தங்களைச் செய்வதில் கொஞ்சம் கொஞ்சமாக வெற்றிகண்டு வருகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியைக் கையில் வைத்திருக்கும் அவருக்கு இவற்றையெல்லாம் செய்வதற்கு நாடாளுமன்றப் பெரும்பான்மை - உறுதியான அரசு - கணிசமான எண்ணிக்கை எம்.பிக்களின் பக்கபலம் - தேவை. அதை எட்டுவதில் அவர் மெது மெதுவாக முன்னேறி வருகின்றார்.

எறிந்த எலும்புத்துண்டைக் கவ்விப் பிடித்து அதற்கு நன்றியாக வாலாட்டும் நாய்கள் போல, பதவிகளுக்காகவும், சலுகைகளுக்காகவும் நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அலைவோர் நாடாளுமன்றத்தில் இருக்கும் வரை நமக்கேன் கவலை என்ற மமதை ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு.

'பல்டி' அடித்த பைலாவைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூவர் குத்துக்கரணம் அடித்திருக்கின்றனர். அவர்கள் விவகாரத்தில் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர் பதவிகள்தாம் எலும்புத் துண்டு.

ஒரேயொரு எம்.பியை மட்டும் கொண்ட ஈ.பி.டி.பிக்கு ஒரு முழு அமைச்சர் பதவி வழங்கியிருக்கும் போது, எங்கள் மூவருக்கும் வெறும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சுப் பதவிகள் மட்டும்தானா என்று அவர்கள் பொருமுகின்றார்கள் என - ஆதங்கப்படுகின்றார்கள் என - சில செய்திகள் கசிந்தும் உள்ளன.

அமைச்சர்களின் எண்ணிக்கையை 35 இற்கு மேல் அதிகரிக்கமாட்டோம் என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அமைச்சர்களின் எண்ணிக்கை, சாதனை நிலையைத் தாண்டியிருக்கின்றது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் என்று இப்போது எண்பது அமைச்சர்கள்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எம்.பியாக இருக்கும் 62 பேரில் ஒருவரைத் தவிர மிகுதி எல்லோரும் ஏதோ ஒரு வகையில் அமைச்சர்கள் என்றால் நிலைமையைப் பாருங்களேன்!

நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் 'தொகையைக் கொண்ட இந்தியாவில் மத்திய அரசின் விவகாரங்களைக் கவனிக்க அமைச்சரவை அந்தஸ்துள்ள 27 அமைச்சர்கள் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை ஆக 65 தான். ஆனால், இரண்டு கோடி மக்களைக் கூடக் கொண்டிராத நமது நாட்டில் மத்திய அரசின் அமைச்சர்களின் எண்ணிக்கை எண்பதை எட்டியிருக்கின்றது.

இப்படி 'அமைச்சுப் பதவிகளை' தாராளமாக வாரி இறைத்து, எதிர்க்கட்சி எம்.பிக்களைக் கட்சி தாவ வைத்து, தனது வலையில் வீழ்த்தியதன் மூலம் அறுதிப் பெரும்பான்மையை உறுதிப்படுத்தும் நிலையை எட்டியிருக்கின்றார் ஜனாதிபதி.

இதை வைத்துக்கொண்டு இப்போது சபாநாயகர் பதவியிலிருக்கும் எதிர்க்கட்சித் தரப்பின் பிரதிநிதியான லொக்கு பண்டாரவை அப்பதவியிலிருந்து அகற்றுவார்; தனது ஆளை அப்பதவியில் அமர்த்துவார்; அதன் மூலம் இந்த நாடாளுமன்றத்தை இப்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணாக அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றும் முயற்சியைப் பங்கமின்றி முன்னெடுப்பார்; அரசமைப்புக் கவுன்ஸிலைத் தன் கைப்பொம்மையாக்கி அதன்மூலம் வாய்ப்பான தேர்தல் ஆணைக் குழுவை உருவாக்குவார்; அதைப் பயன்படுத்தி தனது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கச் செய்யும் வியாக்கியானத்துக்கு இணங்கிப் போகும் ஒருவரை தேர்தல் ஆணையாளராக பதவியில் அமர்த்துவார்.

அப்படியெல்லாம் ஜனாதிபதி குமாரதுங்க செயற்படுவதற்கு வாய்ப்பாக நீதித்துறை அவருக்குக் கிடைத்திருப்பது மற்றதோர் பக்கபலம்.

இவற்றையெல்லாம் மும்முரமாக முன்னெடுக்கப் போகும் அவர், நாட்டின் மிக முக்கியமான - அவசரமாகவும், அவசியமாகவும் தீர்க்கப்படவேண்டிய - இனப்பிரச்சினை விவகாரத்தை, தமது அரசியல் அதிகார நிலைமை உறுதிப்படுத்தப்படும் வரை கிடப்பில் போட்டு விடுவார் என்பது நிச்சயம்.

நாட்டின் நலனை ஒதுக்கி, சொந்த அரசியல் லாபங்களை முன்னிறுத்தும் இந்தப் போக்கு நாட்டை மேலும் பின்னடைவில் ஆழ்த்தும் என்பது மட்டும் உறுதி.

# வடக்கு-கிழக்கில் 46 ஆயிரம் வீடுகள் அமைக்க நிதி உதவி வழங்க உலக வங்கி இணங்கியது

## யாழ்.மாவட்டத்துக்கு 14 ஆயிரம் வீடுகள் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.1

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் நான்கு வருடங்களில் 46 ஆயிரம் வீடுகளை அமைக்க நிதியுதவி வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 14 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவிருக்கின்றன.

கடந்தகால யுத்தம் காரணமாக வடக்கு - கிழக்கில் அழிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கென நிதியுதவி வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

உலக வங்கி வழங்கும் 70 ஆயிரம் ரூபா நிதி மூலம் வீடு அமைக்க முடியாது என்று முதலில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா வழங்குவது என இணக்கம் எட்டப்பட்டது.

இந்தத் தொகையுடன் வீடு அமைக்க முடியுமா என்பதை அறிவதற்காக வடக்கு-கிழக்கின் எட்டு மாவட்டங்களில் பரீட்சார்த்தமாக மாவட்டத்துக்கு நூறு வீடுகள் என்ற அடிப்படையில் வீடுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த செப்ரெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழான வீடமைப்புப் பணிகள் கடந்த மாதம் ஓரளவு பூர்த்தியாகியுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளை உலக வங்கியின் தொழில் நுட்பக் குழு கடந்த வாரங்களில் நேரடியாக மதிப்பிட்டது.

வீடு அமைப்பதில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர்களின் கருத்துக்களையும் அக்குழு கேட்டறிந்தது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் தயாரித்த அறிக்கையை அக்குழு உலக வங்கித் தலைமைக்குச் சமர்ப்பித்தது.

இந்த அறிக்கையின் அடிப்படையில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா அல்லது கைவிடுவதா என்பது குறித்து ஆராய விசேட கலந்துரையாடல் கடந்த புதன், வியாழன் கிழமைகளில் கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல்களில் உலக வங்கியின் உயரதிகாரிகள், புனர்வாழ்வு-நல்லிணக்க அமைச்சு அதிகாரிகள், வீடமைப்புத் திட்ட அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திட்டம் தொடர்பாக இதில் விரிவாக ஆராயப்பட்டு எதிர்வரும் ஜனவரி முதல் நான்கு ஆண்டுகளில் 46 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு, உலக வங்கியின் ஆளுநர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு எதிர்வரும் ஜனவரியில் நடைமுறைக்கு வரும். (எ-3)

# தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்கள் உலக சிக்கன தினப் பிரசாரத்தில்

யாழ்ப்பாணம்,நவ.1

உலக சிக்கன தினமான நேற்று தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளை ஊழியர்கள், மக்கள் மத்தியில் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் நடைபவனியாகச் சென்று பிரசாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

மக்களுக்குச் சேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் தேசிய சேமிப்பு வங்கி நாடு முழுவதும் நடைபவனிப் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டது.

இதன் அங்கமாக வங்கியின் யாழ். கிளை ஊழியர்கள் இருபிரிவுகளாகப் பிரிந்து வீடுவீடாகச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

யாழ்.நகரப் பகுதி மற்றும் குருநகர், நாவாந்துறை, கொட்டடிப் பகுதிகளுக்குச் சென்ற இக்குழுவினர், சேமிப்புத் தொடர்பான விவரங்களை மக்களுக்கு விளக்கினர்.

இத்தகைய நடைபவனி குடாநாட்டில் இயங்கும் தேசிய சேமிப்பு வங்கியின் ஆறு கிளைகளினாலும் மேற்கொள்ளப்பட்டது. (எ-3)



மக்களுக்கு சேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் நடைபவனி மேற்கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.கிளை ஊழியர்கள்குழு 'உதயன்' அலுவலகத்துக்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படம்.
(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# சித்திர ஆசிரியர் வெற்றிடங்கள் அடுத்த வருடம் முதல் நிரப்பப்படும்

## ஜனவரியில் 51 பேருக்கு நியமனம் வழங்க அமைச்சு அதிகாரி உறுதிமொழி



வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சித்திர ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் அடுத்த வருடம் முதல், படிப்படியாக நிரப்பப்படும் என்று கல்வி, உயர் கல்வி அமைச்சின் சித்திர பாடப் பணிப்பாளர் துஷார குணதிலக தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக எதிர்வரும் ஜனவரி மாதம் 51 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் கூறினார்.

கல்விஅமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலையில் கல்வி கற்கும் ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இருநாள் சித்திர செயமுறைப் பயிற்சியினை நடத்துவதற்கு கல்வி அமைச்சின் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகைதந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் மாலை யாழ்.மத்திய கல்லூரியில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியபோதே, சித்திர பாடப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட சித்திர பாட ஆசிரியர்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன என்ற விடயம் இங்கு வந்த பின்னரே எனக்குத் தெரியவந்திருக்கிறது. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்குச் சித்திர பாட ஆசிரியர்களுக்கு ஐந்து வெற்றிடங்களே உள்ளன என்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களங்கள் கூறிவந்தன.

ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது 400 சித்திர பாட ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளதாக தெரியவந்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வித் திணைக்களங்கள் சரியான தகவல்களைத் தராமல் விட்டதால்தான் இது வரை மேற்படி வெற்றிடங்களை நிரப்ப முடியாமற்போனது. அண்மைக்காலமாக ஜி.சீ.ஈ.சாதாரணதரப்பரீட்சையில் சித்திர பாடத்திற்கான அடைவு மட்டம் மிகவும் குறைந்து செல்வதால், இப்பாடத்தில் சித்தியடையும் மாணவர்களின் தொகையை அதிகரிக்கச் செய்வதற்கு கல்வியமைச்சு நாடுமுழுவதிலும் உள்ள பாடசாலைகளுக்கு சித்திர பாட வழிகாட்டலும் சித்திர செய்முறைப் பயிற்சியினையும் வழங்கி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக இப்பயிற்சிகள் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படுகின்றது. அடுத்தகட்டமாக வன்னிப்பிரதேசத்திலும் நடத்தப்படவுள்ளது.

சித்திர பாடத்திற்கு புதிய பாடத்திட்டத்தினை அறிமுகஞ்செய்யவுள்ளோம். தற்போது நடைமுறையிலுள்ள பாடத்திட்டம் சிங்கள இனத்திற்குரிய கலாசாரம் கலை ஆகியவற்றை முதன்மைப்படுத்தியே அமைந்திருக்கிறது.

இதனால், தமிழ் மாணவர்கள் சித்திர பாடப்பரீட்சையில் சிக்கல்களை எதிர்நோக்கி வந்தனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதனை நிவர்த்தி செய்யும் நோக்குடனே புதிய பாடத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது.

சித்திரபாடத்திற்கு என்று தனியான புத்தகமும் அடுத்த வருடம் முதல் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது பாடப்புத்தகம் தயாரிக்கும் பணியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் கல்வி அதிகாரிகள் குழு ஈடுபட்டுள்ளது - என்று தெரிவித்தார். (4-5-7)

### நாளை

ஐப்பசி 17
செவ்வாய்க்கிழமை
(02.11.2004)
திதி: பஞ்சமி
பிற்பகல் 04.18 வரை
நட்சத்திரம் : திருவாதிரை
முன்னிரவு 11.56 வரை
சுபநேரம்: 10.34 - 12.04
இராகுகாலம் 3.00 - 4.30
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தோழமைக்கு உரிமை கொடு; அதனைக் கடமை நேரத்தில் தவிர்த்துக்கொள்.

# சுழிபுரம் பகுதி வீதிகளில் சேறும் சகதியும்; பயணிகளுக்குச் சிரமம்!

சுழிபுரம்,நவ.1

தொடர்மழை காரணமாக சுழிபுரம் பகுதிகளில் உள்ள வீதிகள் சில சேறும் சகதியுமாய் உள்ளன. இதனால், பொது மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலைக்கு முன்பாகவுள்ள வீதியில் கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதிலும் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடையவில்லை. இதனால், இந்த வீதியூடாகச் செல்லும் மாணவர்கள், பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (எ-6-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி

**பழைய மாணவர்களே!**

**கல்லூரியின் 110ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் (13-11-2004) சனிக்கிழமை நடைபெறவுள்ளது.**

விழா சிறப்புற தங்கள் பெயர்களையும் தற்போதைய முகவரிகளையும் கல்லூரி அதிபருக்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கந்தரோடை,
சுன்னாகம்.
(சி-38616) (26-14-15) - விழாச் சபையினர்.

# நன்றி நவில்கின்றோம்



அமரர் அருட்திரு.
**S.A.மைக்கல்சாமி** (O.M.I.)

அவர்களது இறுதிப் பயண வழிபாடுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். குறிப்பாக, அடிகளார் அவர்கள் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதிலிருந்து, அவரை இறுதிவரை மிகவும் அக்கறையுடன் கவனித்த வைத்தியர்கள், தாதிகள், உதவியாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் குறிப்பாக வசந்தக குருமாணவர்கள் அனைவருக்கும் அன்புடன் நன்றி நவில்கின்றோம்.

(38184) (26-14-15) - உறவினர்கள்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மன்றத்தில் குறுகிய காலத்தில் மிருதங்கக் கலையினைப் பயின்று "வடஇலங்கை சங்கீத சபை" பரீட்சையில் தோற்றி முதலாவது பிரிவில் சித்தியடைந்த

**செல்வன் விக்னேஸ்வரன் மயூரதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவருக்குத் திறமையான முறையில் பயிற்சியளித்த "சங்கீதரத்தினம்" சிதம்பரநாதன அவர்களின் மாணவன் நுண்கலைமாணி அநுருத்தன ஆசிரியருக்கு எமது நன்றியினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-38612)

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற
நிர்வாக சபை,
மாணவர்கள், ஆசிரியர்கள்!

# சமாதானத்தை வலியுறுத்தி மாணவரிடையே போட்டிகள்

## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தவுள்ளது

யாழ்ப்பாணம்,நவ.1

சமாதானத்தை வலியுறுத்தி யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகளைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் நடத்தவுள்ளனர்.

கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியம் மற்றும் பேச்சு ஆகிய போட்டிகளே இவ்வாறு நடத்தப்படவுள்ளன.

சமாதானம் தொடர்பாக மாணவர்களிடையே எழும் கருப்பொருளினை மையமாகக்கொண்டே இந்தப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகள் தரம் 9, 10, 11 ஆகியவற்றை உள்ளடக்கியவை கீழ்ப்பிரிவாகவும் ஜி.சீ.ஈ உயர்தரத்தினை மேற்பிரிவாகவும் கொண்டு நடத்தப்படவுள்ளன.

இந்தப்போட்டிகளில் பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் அனைவரும் தமது பெயர் விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபருடாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் கோட்ட மட்டம், வலயமட்டத்தில் நடத்தப்படும் போட்டிகளிலும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மாணவர் பேரவையினால் செய்யப்பட்டுள்ளன.

(4-6)

# சித்த மருத்துவத்துறையின் மாணவர்கள் விடுதி புனரமைக்கப்படுகிறது

சாவகச்சேரி,நவ.1

2000ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஷெல் வீச்சுக்களால் சின்னாபின்னமாகச் சேதமடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கைதடி சித்த மருத்துவத்துறை மாணவர்களது விடுதி மீளப்புனரமைப்புச் செய்யப்படுகிறது.

மாணவர்களது விடுதியில் ஒருபகுதி மீளப் புனரமைப்புச் செய்யப்பட்டுப் பூர்த்தியடைந்துள்ளது. தொடர்ந்து மற்றைய விடுதிகள் துரிதமாகச் செப்பனிடப்பட்டு வருகின்றன.

சித்தமருத்துவத்துறை மாணவர்களுக்கு விடுதி இல்லாதநிலையால் மாணவர்கள் பலரும் பிற இடங்களுக்குச் சென்று தங்கியே தமது விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (4-31)

# டீசல், பெற்றோல் விலைகள் மீண்டும் உயரும்?

கொழும்பு,நவ.1

டீசல் மற்றும் பெற்றோலுக்கென பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்டுவந்த மானியம் கடந்த செப்ரெம்பர் மாதம்முதல நிறுத்தப்பட்டிருப்பதால் இவற்றின் விலைகள் அடுத்த மாதம்முதல் 4ரூபாவால் அதிகரிக்கப்படக்கூடுமென இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

டீசல் மற்றும் பெற்றோல் தொடர்பாக வழங்கப்பட்டுவந்த மானியம் நிறுத்தப்பட்டுள்ளதாலும் உலகச் சந்தையில் பெற்றோலின் விலைகள் அதிகரித்துள்ளதாலும் ஒரு லீற்றர் டீசலின் விலையை 50ரூபா 50சதம் வரையிலும், ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 72 ரூபாய் வரையிலும் அதிகரிக்க வேண்டிய நிலை உருவாகலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-204)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3889674 இலிருந்து 3906794 வரை

சீட்டிழுப்பு இல. 1552
திகதி 30.10.2004

வெற்றி எண்கள்
**07 20 22 37 57**

போனஸ் எண் **17**

ஜக்பொட் பரிசு ரூபா.55,71,800/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 55,71,800/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4 | 113 | 10,000/- | 11,30,000/- |
| 3 | 5,297 | 500/- | 26,48,500/- |
| 2 | 89,112 | 20/- | 17,82,240/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 07ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 109,895 | 10/- | 10,98,950/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட் **Rs. 64,22,250/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 76,59,690/-

தொடர் இல. 2000000 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 03 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3891759-2-24
3894572-2-07
3900611-6-70
3893553-1-22
3900092-7-77


# முதலாம் - இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வைரமுத்தாபிள்ளை சபாரத்தினம்**
மலர்வு: 22-10-1933
உதிர்வு: 12-11-2003

அமரர்
**சபாரத்தினம் வள்ளிநாயகி**
மலர்வு: 18-01-1942
உதிர்வு: 21-11-2002

*எங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து ஓராண்டென்ன ஈராண்டென்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் அகலாது மனதைவிட்டு உங்கள் நினைவுகள்!*

*உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

காங்கேசன்துறை வீதி, மல்லாகம். (சி-38613) (26-14-15) - குடும்பத்தினர்.


# இதோ ஒரு புதிய அறிமுகம்

TVS



Victor
More miles per hour
GLX 125

**The Stylish Powerful New TVS Victor with Vfi**

உங்கள் தெரிவு வண்ணங்களுக்கு முந்துங்கள்!

GLX 125

உடன் வருகை தாருங்கள்:
**Yaso Motors**
163, Stanly Rd.,
Jaffna.
☎ 222 2544

TVS LANKA PVT LTD
இன்
அங்கீகாரம் பெற்ற
விற்பனையாளர்.

(சி-38818) (26-14-15)


# முதலாவது பிறந்த தின வாழ்த்து

01-11-2004



முருகந்தநகர் மசார் பளையைச் சேர்ந்த செல்வரத்தினம் (தங்கன்) - உதயா தம்பதிகளின் செல்வப் புதல்வி

செல்வி **தனா**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (01.11.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் குதூகலத்துடன் கொண்டாடுகின்றார்.

செல்வி தனாவை அன்பு அப்பா, அம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அம்மம்மா, அக்காமார், அத்தான், அண்ணாமார், உற்றார், உறவினர் ஆகியோர் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வேண்டும் என்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

(சி-38615)

புலோப்பளை, பளை
(43-14-15-26)

தகவல்:
சி.சிவரூபன் (ரூபன்) மாமா.


# மில்லேனியம் பெஷன் & பொம்பே பஸார்

10, POWER HOUSE RD, GRAND BAZAAR, JAFFNA.

மலாயன் கபே முன்பாக
T.P : 021 4590174,
0777 311486



MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

# பண்டிகைக்கால அதிரடி SALE

கண்ணைக் கவரும் புத்தம் புதிய சாறிவகைகள், ஏராளமான ஆண்,பெண் சிறுவர், சிறுமியர்களுக்கான **புதியதோர் உலகம்!**

**ஒருமுறை வந்து பாருங்கள்!**

ரூபா 3000/= இற்கு மேலாகக் கொள்வனவு செய்கின்ற
ஆண்களுக்கு ஓர் அழகிய சேட்
பெண்களுக்கு ஓர் அழகிய பிளவுஸ்
} பரிசு!

(C/38611)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாடு இராணுவம் சூழ்ந்த பிரதேசமாகவே இருந்து வருகிறது

## நிமலராஜன் நினைவு நிகழ்வில் செம்மணன்



யாழ்ப்பாணம்,நவ.1

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் எமது பிரதேசம் இராணுவம் சூழ்ந்துள்ள பிரதேசமாகவேவுள்ளது. வெறுமன 12 அடிப் பாதையான ஏ-9 பாதை மட்டும் திறந்திருக்கிறது. அதுவும் மாலை 7 மணியுடன் மூடப்பட்டுவிடும். இதுவே இன்றைய எமது இனத்தின் நிலை.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் நான்காம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் அண்மையில் சர்வதேச மாணவர் பேரவையின் அலுவலகத்தில் நடைபெற்றபோது செம்மணன் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

யாழ்.குடாநாடு சிறிலங்கா இராணுவப் படையினரின் ஆக்கிரமிப்புக்குள் இருந்தவேளை எமது தமிழ்மக்கள் பட்ட அவலங்களை - இராணுவத்தினரால் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை - சர்வதேச உலகிற்கு பலவேறு வகையான ஊடகங்களுடாக அனைவரும் அறியும் வகையில் தியாகப் பணியாற்றியவர் நிமலராஜன்.

அந்தக் காலகட்டத்தில் நிமலராஜன் எனும்




பேனா முனைக்குத் தேசவிரோதச் சக்திகளால் பயமுறுத்தலும் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டன.

ஆனால், அந்தப் பயமுறுத்தலைக் கண்டு நிமலராஜன் அடங்கிவிடவில்லை. அதுவே ஒரு சவாலாகக் கருதி எமது தமிழினத்திற்காக ஆற்றிய பணி அளவிடமுடியாது.

இன்று எமது தமிழர் பிரதேசத்தைச் சூழ்ந்து இராணுவம் காவலரண் அமைந்திருக்கிறது. வெறுமனே 12 அடிப்பாதை ஏ-9 மட்டும் திறந்து விடப்படுகின்றது. அது இரவு 7 மணியோடு மூடப்பட்டுவிடும். அதன்பின் இராணுவத்தால் சூழப்பட்ட பிரதேசமாக எமது பிரதேசம் விளங்குகிறது - என்றார் அவர்.

### பங்களிப்புகள் பலவிதம்

யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி உரையாற்றுகையில் கூறியதாவது:-

விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வகையான பங்களிப்புக்களை தமிழினம் சளைக்காமல் ஆற்றிவருகின்றது. குறிப்பாகச் சொல்லப் போனால் எமது போராளிகள் ஆயுதமுனையில் விடுதலைக்காகப் போராடி மடிந்திருக்கின்றார்கள் மற்றும் பேனா முனையில் தமிழ்த்தேசியத்தின் உண்மையின் வடிவத்தை உலகிற்கு ஊடகத்தினூடாக வெளிப்படுத்திய ஊடகவியலாளர்கள் தேசவிரோதச் சக்திகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இன்னும் பலவகையான பங்களிப்போடு எமது தலைவனின் தளராத துணிவோடு நகர்த்தப்படுவதுதான் எமது விடுதலைப் போராட்டம் - என்றார்.

(ப-13-86)

# பண்புடைய கல்விமான்களை உருவாக்க அனைவரும் ஊன்றுகோலாக உதவவேண்டும்

## அறக்கொடை விழாவில் துணைவேந்தர் மோகனதாஸ்

வலி.கிழக்கு,நவ.1

சமூகத்திலே சிறந்த பண்புடைய கல்விமான்களை உருவாக்க அனைவரும் ஊன்றுகோலாக இருந்து உதவவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சு.மோகனதாஸ்.

அண்மையில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் இடம்பெற்ற முதலாம் ஆண்டு அறக்கொடை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது :-

சமூகப்பற்றுள்ள, பண்புள்ள, பொதுச்சேவை செய்யக்கூடிய சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோரிடமும் உள்ளது. அந்தவகையில், இந்த சிவசக்தி மணிமண்டப அறக்கொடையினரும் வசதியற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த உதவித்தொகையினை வழங்க முன்வந்தமை பாராட்டத்தக்க ஒன்றாகும்.

ஏழை மாணவர்களின் கல்வியை முன்னேற்ற உதவி செய்யும்போது அம்மாணவன் தன் எதிர்காலத்தில் மேலும் பல ஏழை மாணவர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணத்தைப் பெறுகிறான் - என்றார்.

தொடர்ந்து செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் உரையாற்றும்போது - இன்று எங்கு பார்த்தாலும் ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள் என கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், இவை எதிர்காலத்தில் எப்படியிருக்க வேண்டும் என்ற தூர நோக்கம் அற்றே கட்டப்படுகின்றன.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ளவர்கள் பலர் தமது உறவினர்களுக்கும் தாம் கற்ற பாடசாலைகளுக்கும் தொண்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் பலதரப்பட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் பணத்தை அனுப்பி வருகின்றனர்.

அவர்கள் இவ்வளவு கஷ்டத்தின் மத்தியில் பணத்தினை அனுப்ப, இங்கே உள்ளவர்கள் அந்தப்பணத்தினை வீண்விரயமாக்குகின்றனர். புதிதாகக் கட்டும் கட்டடங்களை உடைத்து ஒரு வருடத்திற்குள்ளேயே வேறுவிதமாக கட்டுவதும் இரவிரவாக திருவிழாக்கள் செய்வதும் இளம் சந்ததியினரின் தேவைக்கு மேல் அவர்களுக்கு ஆடம்பரப் பொருள்களினை வாங்கிக்கொடுப்பது போன்ற செயல்கள் எமது மண்ணில் இடம்பெறுவது மிகவும் வேதனைக்குரியதாகின்றது.

அத்துடன், ஆலயங்கள் தமது ஆலயப் பணிகளில் மட்டுமே நின்றுவிடாது சமூகப்பணிகளிலும் ஈடுபடவண்டும். இன்று கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் சைவப்பணிகள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த வகையில், குடாநாட்டில் உள்ள அதிக வருவாய் பெறும் ஆலயங்கள் தமது அறக்கொடை கிளை நிறுவனங்களை இம்மா வட்டங்களில் அமைத்து தமது பணிகளினைத் தொடர வேண்டும்.

கல்விகற்கும் ஏழைச் சிறுவர்களை ஊக்குவித்தல், வயோதி பர்களைப் பராமரித்தல், நோயுற்றோருக்கு உதவுதல் போன்ற திட்டங்களை முதலிலே முன்னெடுக்க அனைத்து ஆலயங்களும் முன்னிற்க வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆவரங்கால் சிவன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ வே.நடராஜக்குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகளும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி, ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அதிபர் அ.அருணந்தி சிவம், யாழ். பல்கலைக்கழக முதுநிலை மெய்யியல் விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி, கூட்டுறவாளர் எஸ். கிருஷ்ணராசா, பிரதிக்கணக்காளர் நாயகம் வே.கந்தசாமி ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.



இறுதியில் வசதி குறைந்த 25 பல்கலைக் கழக மாணவர்களுக்கான மாதாந்த உதவுதொகை வழங்கப்பட்டது.

மாலை நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ப-180-203)

# மதுவுக்கு அடிமையானவர்களை புறந்தள்ளாது மீட்டெடுக்க முடியும்

## குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு குறித்துப் பேராசிரியர்

வலி.கிழக்கு, நவ.1

மதுபாவனை ஒழிப்பில் குடும்பங்கள் பெரும பங்காற்ற முடியும். மதுவுக்கு அடிமையானவர்களைப் புறந்தள்ளாது மீட்டெடுக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக் கழக சமூகவியல் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.

கியூடெக் நிறுவன மதுவிலக்கு (ஏ.ஏ) குழுவினால் நடத்தப்பட்ட உலக மதுவிலக்கு நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

மதுபாவனையில் அடிமையாகும் குடும்ப அங்கத்தவர்களைப் புறந்தள்ளாமல் அவரை மீட்டெடுக்கும் பணி பெரும் பொறுப்பும் வலலமையும் உள்ளது. இதற்கு உதாரணமாக கியூடெக் நிறுவனத்தின் மதுவிலக்கு ஏ.ஏ.குழுவினரின் செயற்பாடுகளைப் பாராட்டுகின்றேன்.

மதுவிலக்கின் மகிழ்ச்சியை இங்கு கூடியுள்ள உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் முகங்களில், குறிப்பாக குழந்தைகளின் மலர்ச்சியில் கண்டு ஆனந்திக்கின்றோம். இந்த மகிழ்ச்சியை, அழகை எல்லோரும் தரவேண்டும் என்ற உங்கள் எண்ணம் உயர்வானது. இதற்காகத் திருத்திய உங்கள் அனுபவங்களை ஊர் ஊராக நாடகங்களின் வடிவிலும் கலந்துரையாடியும் எடுத்து செல்லுகின்றமை பாராட்டப் படவேண்டிய ஒன்றாகும்.



மதுவிலிருந்து மீளும் குடும்பங்களுக்கான பொருளாதார மீள்வாழ்வுக்கான திட்டங்கள் இன்றைய சமூக மேம்பாட்டு - நிதியுதவி நிறுவனங்கள் திட்டமிட்டு வழங்குவது அவசியமாகும். அதேவேளை - மதுபாவனை இல்லாத மகிழ்ச்சியான ஒரு வாழ்வுக்கான சமூக விழிப்பு ஏற்பாடுகளை பட்டறிவாய் அதன் தீமைகளை உணர்த்த நீங்கள் தலைமை தாங்கி முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

கியூடெக் நிறுவன மதுவிலக்கு குழுவின் இணைப்பாளர் டாக்டர் அ.பிறித்ரோ டக்ளஸ் பேசுகையில், மதுவிற்கு அடிமையாகி இருப்பவர்களை உளவியல் மருத்துவ சிகிச்சையினை வழங்குவதன் மூலம் அவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க முடியும் என்றார்.

(ப-180)

# முதியோருக்கு அன்பு,பாசம் அரவணைப்பு காட்டவேண்டும்

## உதவி அரச அதிபர் வீரபத்திரப்பிள்ளை



சங்கானை,நவ.1

முதியவர்கள் மேல் அன்பு, பாசம், அரவணைப்புக் காட்டவேண்டும். நாமும் முதியவர்கள் ஆவோம் என்ற சிந்தனை ஒவ்வொரு இளம் சமுதாயத்திலும் தோன்றுமானால், முதியோர் வாழ்வும் சிறப்பாக அமையும். இன்றைய இளம் சமுதாயத்தினர் இதனை மறந்துசெயற்படுகின்றார்கள்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முதியோர், சிறுவர் தினவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரையாற்றும்போது யாழ்.தலைமைக் காரியாலய உதவி அரச அதிபர் வீ.வீரபத்திரப்பிள்ளை இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் -

அன்பையும், பாசத்தையும் தேடும் முதியவர்களை நாம் பராமரித்து, பேணிக்காத்து அவர்கள் உடல் நலத்துடனும், உள நலத்துடனும் வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். இதனை இளம் சமுதாயம் உணர வேண்டும் என்ற நோக்கில் இதனை அவர்களுக்கு உணர்த்துவற்காக எடுக்கப்படும் விழாவே இவ்விழாவாகும் எனக் குறிப்பிட்டார்.

சங்கானைப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தனது தலைமையுரையில்-

இன்றைய இளம் சமுதாயத்தினர் எவ்வாறு முதியோரைக் கௌரவிக்கின்றனர் என்பதை நம் வாழ்நாளில் கண்டு வருகின்றோம். இவற்றை நாம் சீர்செய்யவேண்டும். முதியோரின் அனுபவம், பட்டறிவு போன்றவற்றை நாம் கற்றுக்கொள்ளவேண்டும் - என்றார்.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துரையாற்றிய அ.சிவசுவாமி, எமது சொத்துக்களாக முதியோர் விளங்குகின்றனர். நம் இனத்தின் கலை, கலாசாரங்களை - விழுமியங்களைப் பேணிக்காத்தவர்கள் இவர்கள். இவர்களைப் பராமரிப்பதும், பேணுவதும் இன்றைய இளஞ்சமுதாயத்தினரின் மகத்தான பொறுப்பாகும் - என்றார்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் சங்கானை அரசடி வைரவ ஆலயத்தில் வழிபாடு நடைபெற்று, அங்கிருந்து முதியோர்கள் மாலை அணிவிக்கப்பட்டு, நாதஸ்வர மங்களவாத்திய இசையுடன் ஊர்வலமாகப் பிரதேச செயலகத்திற்கு அழைத்து வரப்பட்டனர். செயலக ஊழியர்களினால் இன்னிசைக் கச்சேரியும், கௌரவிக்கப்பட்ட முதியோரின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நிர்வாக அலுவலர் மு.சிவராசாவினால் பாடப்பெற்ற 'அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே' என்ற அன்றைய சினிமாப்பாடல் சபையோரை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கவைத்தது.

இவ்விழாவில் ஏற்கனவே பாடசாலை மட்டத்தில் முதியோர் தினப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும், முதியோரைக் கௌரவித்துப் பரிசளிப்பும் இடம்பெற்றன.

(ப-29)

# எமது முன்பள்ளிச் சிறார்கள் எதிர்காலத்தில் சாதனைகள் படைப்பர்

கோண்டாவில்,நவ.1

எமது மண்ணில் சிறந்ததொரு சமுதாயம் உருவாகப்போகிறது. அதில் எந்தவித மாற்றமும் இல்லை. எனவே, அந்த யுகத்தைப் படைக்கின்ற சாதனையாளர்களாக இந்த முன்பள்ளிக் குழந்தைகள் மிளிருவார்கள்.

- இவ்வாறு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற அம்பிகை முன்பள்ளியின் விளையாட்டு விழாவில் சிறப்பு அதிதியாக கலந்து உரையாற்றுகையில் யாழ்.மாவட்ட புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் -

குழந்தைகளுடைய மூளை வளர்ச்சி 3 வயது தொடக்கம் 6 வயது வரைதான் என்று விஞ்ஞானம் கூறுகின்றது. இந்தக்காலப் பகுதிகளில் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு போசாக்கான உணவு, கல்வி சம்பந்தமான அறிவியல் சம்பந்தமான விடயங்களை ஊட்ட வேண்டும் - என்றார்.



இன்று யாழ்.மாவட்டத்திலே 718 முன்பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 1300 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். நாம் அனைத்து முன்பள்ளிகளையும் இணைத்து அவர்களில் இருந்து 22 இணைப்பாளர்களைத் தெரிவுசெய்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்கள் மூலம் இந்த முன்பள்ளிகளைச் சிறந்த முறையில் செயற்படுத்தி வருகின்றோம் என்று அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மலர் சின்னையா மற்றும் பலர் பேசினர்.

(ப-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சீவரத்தினம் விவேகானந்தமூர்த்தி(ராயு)

(கலைப்பீட 2ஆம் வருட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்)



பட்டம்பெறுமுன் பட்டமரமானாயோ?
சத்தம் ஏதும் இன்றி சாவுனக்கானதோ?
நித்தம் உனைக் காணுமுறவுகள்
நிம்மதி இழந்ததையா!
நீ மீண்டும் பிறப்பாய்;
எம் வாழ்வில் கலப்பாய்!

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவதுடன் அவரது உறவுகளின் துயரில் நாங்களும் பங்கெடுத்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக முகாமைத்துவ பயிற்சி நெறி - 2004,
யாழ்.பல்கலைக்கழகம்.
(38156) (42-26-14-18)

# கண்ணீர் அஞ்சலி



தங்கோடை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 37/5, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

## சுந்தரம்பிள்ளை சபாநாதன் (சோதி)

(ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ காசாளர்)

அவர்கள் (28.10.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்த'னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ,*
*13,14, பெரிய கடை ,*
*யாழ்ப்பாணம்.*

ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ
உரிமையாளரும்,
ஊழியர்களும்.

(சி-38603) (43-14-26-18)

# கண்ணீர்க் காணிக்கை



எமது நிறுவன ஆசிரியை
செல்வி உமாதேவி அவர்களின் அன்புத் தந்தையார்

## சுந்தரம்பிள்ளை சபாநாதன்

(காசாளர் - லிங்கநாதன் புடைவையகம்)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை வேண்டுகின்றோம்.

MCS நிறுவன ஆசிரியர்களும்,
மாணவர்களும்.

(சி-38588)(42-14-18-26)

## காரைநகரில் புதிய அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பணம்

காரைநகர், நவ.1

காரைநகர், கிழவன்காடு கலாமன்றத்தினால் கடந்தவாரம் அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இநத அறநெறிப் பாடசாலையின் தொடக்க விழா கலாமன்ற மண்டபத்தில் மன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெற்றபோது, காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவரும் தியாகராசா ம.ம.வித்தியாலய அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை வகுப்புகளை ஆரம்பித்துவைத்தார்.

இந்த அறநெறிப் பாடசாலையில் சங்கீதம், நடனம், மிருதங்கம், பண்ணிசை போன்ற வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருவதாகவும் -

இதில் 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருவதாகவும் - கலாமன்ற தலைவர் ந.சோதிநாதன் தெரிவித்தார்.

(எ-73)

## மாணிக்கவாசகர் சபையின் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

காரைநகர்,நவ.1

காரைநகர் மாணிக்கவாசகர் சபையினால் வருடாந்தம் நடத்தப்படும் சைவசமயப் பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களைப் பாடசாலை அதிபர்கள் ஊடாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு மணிக்கவாசகர் சபையின் பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்குத் தங்கப்பதகங்களும் சிறந்த பெறுபேறு பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும், திருவாதிரை உற்சவ காலத்தில் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் மாணிககவாசகர் விழாவின்போது வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-73)

# வைத்தீஸ்வராவின் கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மனையியல் ஆசிரியை
செல்வி ச.சின்னத்துரை
அவர்களின் பாசமிகு சகோதரன்

## சின்னத்துரை சீவரட்ணம்

அவர்கள் காலமானதையிட்டு அதிர்ச்சியடைந்தோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(38171) (26-14-18)

# மரண அறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை குணமணி



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை குணமணி 28-10-2004 வியாழக்கிழமை இறைவனின் திருப்பாதம் சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - அன்னம்மா தம்பதிகளின் மூத்த புத்திரியும் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஜெயசேகர் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் (Reerdo, கிளிநொச்சி), மதிவதனி (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயவதனி (பிரான்ஸ்), கௌரி (பிரான்ஸ்), பரமேஸ்வரன் (பிரான்ஸ்), சர்மிளா (வணிக ஒன்றியம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திரஜித், மதுமிதன், ஐஸ்வர்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் தனபாக்கியம், வடிவழகானந்தன், மங்களேஸ்வரி, கோணேஸ்வரி, சகுந்தலாதேவி, ஞானசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தேவராஜா, கமலாதேவி, ஜெயபாலன், வசந்தகுமாரி (சுவிஸ்), ஆனந்தன் (கனடா), அழகம்மா (அமரர்), க்ந்தசாமி, விஜயரட்ணம் (நில அளவைத் திணைக்களம், வவுனியா), இராசலிங்கம் (யாழ்.போதனா வைத்தியசாலை), திலகராணி, மஞ்சுளாதேவி (பிரான்ஸ்), பெரியதம்பி, கிருஷ்ணராஜா, லீலாவதி, தம்பிராசா (சுவிஸ்), உமா (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-11-2004) திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதகல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

தகவல்:
பொ.கணபதிப்பிள்ளை
(கணவர்).

(38169) (26-14-18)


சுடர் ஒளி
THE SUDAR OLI
வார மலர்




வாங்கிவிட்டீர்களா?
இவ்வார இதழ்
பரபரப்பான விற்பனையில்

ஒக்டோபர் 31, நவம்பர் 06 மலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

# சைவசமயம் I, II

## விடைக்குறிப்புகள்

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1. 2 | 2. 3 | 3. 4 | 4. 2 | 5. 1 |
| 6. 3 | 7. 2 | 8. 4 | 9. 3 | 10. 1 |
| 11. 2 | 12. 2 | 13. 3 | 14. 1 | 15. 3 |
| 16. 3 | 17. 3 | 18. 3 | 19. 2 | 20. 4 |
| 21. 2 | 22. 4 | 23. 3 | 24. 1 | 25. 3 |
| 26. 2 | 27. 2 | 28. 3 | 29. 4 | 30. 2 |
| 31. 4 | 32. 2 | 33. 1 | 34. 3 | 35. 3 |
| 36. 4 | 37. 2 | 38. 2 | 39. 1 | 40. 3 |

### பகுதி II

**01.** 1. இலச்சினை ஒன்றில் காணப்பட்ட யோகி போல அமர்ந்திருக்கும் கொம்புடைய கடவுள் சேர். ஜோன். மார்சலால் 'முந்து சிவன்' எனக் கூறப்பட்டது. இவ்வுருவத்தைச் சூழ விலங்குகள் காணப்படுவதாகவும் உள்ளது. இது சிவன் உயிர்களுக்குத் தலைவனாய் விளங்குவதை எடுத்துக்காட்டுகிறது. தவிரவும், சிவலிங்கத்தை ஒத்த கூம்புவடிவக்கற்கள் கருநிறக்கல் என்பனவும் இங்கு சிவ வழிபாடு நிலவியமையை ஆதாரப்படுத்துகின்றது.

2. சங்கிதைகள்
பிரமாணங்கள்
ஆரணியங்கள்
உபநிடதங்கள்

3. சமயவழிபாட்டு முறைகளைப் பொதுவாகக் கூறுவதால் வேதம் பொதுநூலாகவும், ஒவ்வொரு சமயத்துக்குமுரிய வழிபாட்டு முறைகளைத் தனித்தனியே சிறப்பாகக் கூறுவதால் ஆகமம் சிறப்பு நூலாகவும் கொள்ளப்படுகிறது.
ஒற்றுமைகள்:-
I) இரண்டும் மனிதர்களால் ஆக்கப்படாது இறைவனால் அருளப்பட்டது.
II) சைவ சமயத்தின் முதல்நூலாகத் திகழ்ந்து இறைவனை அடைய வழிசெய்வன.

4. 'சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
ஒன்றவன் தானே' 'ஒருவனே தேவன்' என்ற திருமந்திரப் பாடலடிகள் மூலமும், "ஏகம் சத் விப்ரா வஹுதா வதந்தி' என்ற வேதவாக்கியத்திலிருந்தும் இறைவன் ஒருவனே என்பதை அறியமுடியும்.

**02.** 1. I) மூன்று வயதில் சீர்காழித் தலத்தில் ஞானப்பால் பெற்றமை
II) திருவைந்தெழுத்து பொறிக்கப்பட்ட பொற்றாளம் திருக்கோலக்காவில் பெற்றமை.
III) முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் போன்ற விருதுகளை மாறன்பாடி தலத்தில் பெற்றமை.

2. I) திருவீழிமிழலையில் பஞ்சம் நிலவியபோது பதிகம் பாடி இறையருளால் படிக்காசு பெற்று அன்னதானம் புரிந்து மக்கள் துயர் போக்கியமை.
II) திருமறைக்காட்டில் கோயில்க்கதவு நீண்டகாலம் மூடப்பட்டிருந்ததால் மக்கள் வழிபட முடியவில்லை. அப்பர் பதிகம் பாடி திறந்த கதவை கிரமமாக மூடித்திறக்க சம்பந்தர் வழிசெய்தார்.

3. இறைபணி நிற்றல் அவசியம் என்பதும், சிவனடியாரை மதிக்கும் பண்பு, இறைவழி பாட்டால் துன்பங்களிலிருந்து நீங்கலாம் என்பதுடன் மதமாற்றத்தால் நன்மைகள் கிட்டாது. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்கள் என்பதனையும் உணரமுடியும்.

4. 8ஆம் திருமுறை - திருவாசகம், திருக்கோவையார்
9ஆம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
10ஆம் திருமுறை - திருமந்திரம்
11ஆம் திருமுறை - 41 பிரபந்தங்கள்
12ஆம் திருமுறை - பெரியபுராணம்

**03.** 1. திருஞானசம்பந்தர், சுந்தரர்
இராமேஸ்வரத்தில் இருந்தபடி.

2. முன்னேச்சரம்
வடிவாம்பிகை சமேத முன்னைநாதர் திருவுலாவுக்குத் தேரில் எழுந்தருளும்போது அறுபத்துமூன்று நாயன்மாரும் மணிவாசகரும் எழுந்தருளிய தேர் முன்னைநாதரை வழிபடும் பாவனையில் சுவாமியை நோக்கியவாறு பின்னோக்கிச் செல்லப்படும் காட்சி காண்போர் மனதைக் கவருவதாக அமையும்.

3. திருத்தம்பலை

4. I) கொழும்பு நகரத்தில் அமைந்துள்ள ஒரெயொரு சிவன்கோவில்.
II) முற்றிலும் கருங்கல்லினால் ஆக்கப்பெற்றது.
III) நித்திய அக்கினியுடன், நித்திய உற்சவம் நடைபெறும் ஆலயம்.

**04.** 1. அந்தகன் - யமன்
அமலநாயகன் - சிவபெருமான்
மால் - திருமால்
அயன் - பிரமா

2. காசியில் சிவபூசையில் இருந்தார்

3. 1. தவறு புரிந்தவரை மன்னித்தல்
2. பணிவு
3. இறையன்பு
4. கருணை, நல்லொழுக்கம்

4. கச்சியப்பச் சிவாச்சாரியார், முருகனே திகடசக்கர என அடியெடுத்துக் கொடுத்தார்.

**05.** 1. மனம் பொறிவழிப்போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியே னும். 'மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் இறைவனை மெய்யன்போடு விதிப்படி வழிபடுதல்' விரதமாகும்.

2. I) கடவுளர்க்குரிய விரதங்கள்
சிவவிரதம் - பிரதோஷம், சிவராத்திரி
சக்திவிரதம் - நவராத்திரி, கேதாரகௌரி
முருக விரதம் - கந்தசஷ்டி, திருக்கார்த்திகை
விநாயகர் விரதம் - சதுர்த்தி, விநாயகர் சஷ்டி.
II) கடமை விரதங்கள்:-
அமாவாசை, பௌர்ணமி, மகாளயம்.

3. I) பிரமா சித்திரைமாத முதல்நாளில் தனது படைப்புத்தொழிலைத் தொடங் கியதாகக் கூறப்படுவதாலும், வடதிசை நோக்கிச் செல்லும் சூரியன் மதுரை மீனாட்சி அம்மன் ஆலய மூலத்தானத்தைக் கடந்து செல்லும் தினம் சித்திரை முதல்நாள் ஆகும்.

4.

| விரதங்கள் | பண்டிகைகள் |
|---|---|
| I) ஆன்மீக நோக்குடன் அனுஷ்டிக்கப்படுவது | சமூக முக்கியத்துவத்துடன் கொண்டாடப்படுவது |
| II) உணவைச் சுருக்குதல், முற்றாக விடுதல், சைவ உணவு உண்ணுதல் | பல்வகை உணவுப் பண் டங்களை உறவினர்களு டன் பகிர்ந்துண்ணுதல் |
| III) இறைதியானம், வழிபாடு புரிதல் | கலைவிழாக்கள் நடத்துதல் |

**06.** 1. உமாபதி சிவாச்சாரியார்
சிவஞான போதத்தின் சார்பு நூலாக விளங்கும் திருவருட்பயன் ஒவ்வொன்றும் பத்து குறள் வெண்பாக்கள் அடங்கிய பத்து அதிகாரங்களை நூறு குறள்களுடன் காப்புச் செய்யுள் அடங்கலாக நூற்றொரு குறட்பாக்களைக் கொண்டது சித்தாந்த அட்டகநூல்களுள் எளிமையும் அருமையும் கொண்ட நூல்.

2. I) தமிழ் எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதன்மை பெற்றிருப்பது போல் இறை வன் உயிர்களுக்கு எல்லாம் முதன்மை பெறுகிறான்.
II) ஐந்தொழில்களையும் புரிந்து உயிர்களுக்குப் புகலிடமாகத் திகழ்கிறான்.
III) தனக்கு மேலான தலைவன் இல்லாதவன்.
IV) தேவர்கள் எளிதில் காணமுடியாத இறைவன் மெய்யடியார்களின் உள்ளத்தில் விரும்பி உறைகிறான்.

3. ஆணவம்

4. I) ஆன்மாக்களை அணுத்தன்மையாக்கி அறியாமையை உண்டுபண்ணுகிறது
II) செம்பில் களிம்புபோல் ஆன்மாவில் அநாதியாய் சேர்ந்துள்ளது.
III) இருளை விடக்கொடியது
IV) பிறவித் துன்பத்தை ஏற்படுத்தவல்லது.

**07.** 1.

| ஈழத்து ஞானிகள் | தமிழ்நாட்டு ஞானிகள் |
|---|---|
| கடையிற் சுவாமிகள் | திருமூலர் |
| செல்லப்பா சுவாமிகள் | சிவாக்கியர் |
| யோகர் சுவாமிகள் | பட்டினத்தார் |
| நவநாதசித்தர் | பாம்பாட்டிச்சித்தர் |
| பெரியானைக்குட்டி சுவாமிகள் | குதம்பைச் சித்தர் |

2. எல்லாம் செப்படிவித்தை
அப்படியே உள்ளது.
ஒரு பொல்லாப்பும் இல்லை.
முழுவதும் உண்மை.
ஒருவருக்கும் தெரியாது.

3. சிவனடியார் கூட்டம்
I) சிவனை நினைத்தாலும், அவர் பற்றிக் கேட்டாலும், திருவுருவைக் கண்டாலும் தம்வசமிழுப்பர்.
II) சிவத்தொண்டு புரிந்தும், அவர் புகழ்பாடியும், திருவைந்தெழுத்து ஓதி யும் இன்புறுவர்.
III) சிவசின்னங்கள் அணிந்த திருமேனியுடையோராகக் காட்சியளிப்பார்.

4. மெய்கண்டதேவர். அருணந்தி சிவாசாரியார்,
மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார்.

**08.** அ)

திருச்சிற்றம்பலம்
பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப் பல்லுலகினி லுயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக் காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய வருள்செய் கேதீச்சர மதுதானே.
திருச்சிற்றம்பலம்

பாடியவர் - திருஞான சம்பந்தர்
சந்தர்ப்பம் - தமிழ்நாட்டின் திருவிராமேச்சரத்தை வழிபட்ட சம்பந்தர் அங்கிருந்த படியே ஈழநாட்டின் திருக்கேதீச்சரத்தை மானசீகமாக வழிபட்டுப் பாடிய திருக்கேதீச்சரப் பதிகத்தின் ஏழாவது பாடல்.
பொழிப்பு - உலக நன்மைக்காக முன்பு சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமா ரர் எனும் முனிபுங்கவர்களுக்கு ஞானநுட்பத்தை விளக்கிய தென்முகக் கடவுள்பால் துலங்கிய அருளின் அருமை இப்போதும் தொண்டர்களுக் குப் பக்தியின் பயனை உணர்த்தும் அருளின் எளிமை திகழ்கின்றது. இத்தகைய சிவமூர்த்தி இயற்கை அழகு பொருந்திய மாதோட்ட திருக் கேதீச்சரத்தில் உவப்புடன் உறைகின்றார்.

ஆ)

திருச்சிற்றம்பலம்
கரியகறைக் கண்டன் ந(ல்)ல கண்மேல் ஒரு கண்ணன்
வரியசிறை வண்டியாழ் செயு(ம்) மாதோட்ட நன் னகருட்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியுமறை வல்லான் திருக் கேதீச்சரத் தானே.
திருச்சிற்றம்பலம்

பாடியவர் - சுந்தரர்
சந்தர்ப்பம் - சுந்தரர் ஈழநாட்டிலுள்ள திருக்கேதீச்சரத்தை மானசீகமாகத் துதித்துப் பாடிய திருக்கேதீச்சரப்பதிகத்தின் நான்காவது பாடல்.
பொழிப்பு - கருநீல கண்டனும் முக்கண்ணனும், வேதவித்தகனும் ஆகிய சிவபிரான் சோலைகள் நிறைந்த மாதோட்டத்தில் பேரலைகள் வீசும் பெருநதியான பாலாவியின் கரையிலே கேதீச்சரத்தில் குடிகொண்டுள்ளார்.

இ.

திருச்சிற்றம்பலம்
மெய்தான் அரும்பி விதிர்விதித்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே.
திருசிற்றம்பலம்

பாடியவர் - மணிவாசகர்
சந்தர்ப்பம் - திருப்பெருந்துறைப் பெருமான் மீது பாடிய திருவாசகப்பாடல்.
பொழிப்பு - உடையவனே உடல், உள்ளம், உரை என்னும் மூன்றும் நீர்த்துளி அரும்பல், கைகூப்பல், கண்ணீர் மல்கல், உள்ளம் குமுறல், "போற்றி சயசயபோற்றி" என்று துதித்தல் ஆகிய பக்தித் துலங்களை வெளிப்படுத்த நான் உன்னைப் பற்றிக் கொண்டேன் என்னை இனங்கண்டு அருள்புரிக.

ஈ,

திருச்சிற்றம்பலம்
செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி யமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கணா யகனே போற்றியே ழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி
திருச்சிற்றம்பலம்

பாடியவர் - கருவூர்த்தேவர் 'ஏழிருக்கை' எனும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பாடிய திருவிசைப்பாப் பாடல்.
பொழிப்பு - முத்தொழில் புரிய மும்மூர்த்தி வடிவம் தாங்குபவரும், அழிவில்லாதவரும் மகாதேவரும், வேத வித்தகர்கள் வாழும் சாட்டியக் குடியிலுள்ள ஏழிருக்கை எனும் கோயிலில் உறையும் இறைவனும் ஆகிய எங்கள் தலைவரே! எமது வணக்கத்தை ஏற்று எம்மைக் காத்தருளும்.

உ,

திருச்சிற்றம்பலம்
திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் திருவெண்ணீ
றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும் பாங்கினொடு
பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும் விதானமும்
வெண்கொடியும் இல்லா ஊரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா ஊரும் அவையெல்லாம்
ஊரல்ல அடவி காடே.
திருச்சிற்றம்பலம்

பாடியவர் - திருநாவுக்கரசர் பாடிய 'தாண்டகம்' எனும் பாடல் வகையில் புகழ்பெற்ற பாடல்
பொழிப்பு - சீராக விழாக்கள் நடைபெறும் ஓர் ஊரில் ஆலயம் ஒன்றோ பலவோ முறைப்படி அமைந்திருத்தல் சிறப்பு ஆகும். மேலும், ஊர் மக்கள் விபூதி தரித்தல், தோத்திரங் கள் பாடுதல், சரியைத்தொண்டு புரிதல், உணவாசாரம் பேணுதல் எனும் சைவநன் னெறியைப் பின்பற்றுதல் ஊரின் சிறப்புக்கு மெருகூட்டும், இத்தகைய சிறப்பில்லாத ஊர்கள் விலங்குகள் திரியும் காடாகவே மதிக்கப்படும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## நாகமுத்து திருநாவுக்கரசு

(J.P.)

(முன்னாள் தலைவர், சுன்னாகம் பல நோ.கூ. சங்கம்)

எமது சங்கத்தின் முன்னாள் தலைவர் நா.திருநாவுக்கரசு அவர்களின் மறைவு எமக்கு ஓர் இழப்பாகும். அவரது மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரின் துயரை நாமும் பகிர்ந்துகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம், சுன்னாகம். (C/38597)(42-15-16) தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

# கண்ணீர் அஞ்சலி



தீவக வலயக் கல்விப் பணிப்பாளரும், யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் உப தலைவர்களுள் ஒருவருமான

## பொ.வேணுகோபால வாணிதாசன்

அவர்களின் அகால மரணத்தினைக் கேள்வியுற்று மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இலங்கை சாரணர் சங்கம், (யாழ். மாவட்டக் கிளை).

(38158)(42-15-16)

# கண்ணீர் அஞ்சலி

எமது தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்

## பொ.வேணுகோபால வாணிதாசன்

அவர்களது அகாலமரணச் செய்தியறிந்து ஆற்றொணாத் துயருற்றோம். அவர் தம் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/நாரந்தனை கணேசவித்தியாலயம். (38148) (26-15-16) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவு மலர்

மண் மகிழ 1970 - 10 - 24



கண் நெகிழ 1995 - 11 - 11

## செல்வன் தருமலிங்கம் பாலச்சந்திரன்

திதி : 2004-11-01 (சதுர்த்தி)

கொடிய ஷெல் அரக்கனின் கோரத் தாண்டவத்தால்
உள்ளத்தை உறைய வைத்தெம் உறவுகள் பறந்தோடி
ஆண்டுகள் ஒன்பதும் ஆனதோ? ஆண்டுகள் தொன்னூறு
சென்றாலும் ஆறாது எம் துயரம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நிரந்தர முகவரி:
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
தற்காலிக முகவரி :
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(38052) (26-15-16)

# 20ஆவது ஆண்டு நீங்காத நினைவலைகள்







| | கந்தசாமி சூரியகுமார் | தம்பிப்பிள்ளை கந்தசாமி | கந்தசாமி தேவகுமார் |
|---|---|---|---|
| தோற்றம் : | 01.01.1964 | 05.02.1930 | 12.10.1961 |
| மறைவு : | 01.11.1984 | 01.11.1984 | 01.11.1984 |

இருபது ஆண்டுகள் விரைந்தோடிப் போனாலும்~ உங்கள்
திருமுகம் மட்டும் நெஞ்சைவிட்டு அகலாதே!
தினமும் உங்களை நினைந்து கண்ணீரில் வாடுகிறோம்
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

பலாலி வீதி, ஊரெழு.

தற்காலிக முகவரி:
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

கந்தசாமி சந்திரகுமாரி
மனைவி, பிள்ளைகள்.

(சி 38594)(29-15-16)

# ஜப்பானியத் தூதர் கிழக்குக்கு விஜயம்

மட்டக்களப்பு,நவ.1

ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கு விஜயம் செய்தார்.

நேற்றுமுன்தினம் காலை திருகோணமலைக்குச் சென்ற அகாஷி அங்குள்ள மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயத்தை மேற்கொண்ட இவர் அங்கு படைத்தரப்பினர், பொதுமக்களின் பிரதிநிதிகள், சமாதானச் செயலகத்தின் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சமாதானப் பேச்சுகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படுமென்று ஜனாதிபதி தன்னிடம் கூறியதாக யசுசி அகாஷி அங்கு தெரிவித்தார். (ஐ-13)

## 'புலரி' காலாண்டு சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்,நவ.1

சித்தன்கேணி புலரி இலக்கிய வட்டத்தினரால் உருவாக்கப்பட்ட புலரி எனும் காலாண்டு சஞ்சிகை நேற்றுமுன்தினம் சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவின் இயக்குநர் அகுமாரவேல் தலைமையில் நடைபெற்ற இச்சஞ்சிகை வெளியீட்டு விழாவில் வாழ்த்துரையினை சித்தன்கேணி சிவன் ஆலய குரு சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. இரகுநாதன் சஞ்சிகையின் வெளியீட்டுரையையும் ஆய்வுரையினை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர் கலாநிதி திருநாவுக்கரசுவும் வழங்கினர்.

சஞ்சிகையின் முதற்பிரதியினை சமாதான நீதிவான் ச.பரமநாதன் பெற்றுக்கொண்டார்.

இந்தச் சஞ்சிகை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கலை, அறிவியல், சமூகம் தொடர்பான ஆக்கங்களைத் தாங்கிவரும் என்று நூலின் ஆசிரியர் என்குகரன் தெரிவித்தார். (ஐ-13)

# வவுனியாவில் கண்காணிப்புக் குழுவுடன் புலிகள் சந்திப்பு

வவுனியா,நவ.1

வவுனியாவில் புளொட் அமைப்பு உறுப்பினர்கள் இருவர் கடத்தப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

புளொட் உறுப்பினர்கள் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழு அதிகாரிகள் தங்களிடம் பிரஸ்தாபித்தனர் என்றும் - இந்தச் சம்பவத்துக்கும் தமது அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் - அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டதாகவும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் தெரிவித்தார்.

(ஐ-3-164)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## சிவச்செல்வம் சோபிதன்



மகிழ்வு 1994-01-20

நெகிழ்வு 2004-10-02

நாள்கள்தான் கடந்தாலும்
ஆறவில்லை எம்துயர் - உன்
புன்முறுவல் பூத்த பூமுகத்தை
எப்போதுதான் காண்போம்?
பிஞ்சு வயதில் உன் வாழ்வை
காலனும் பறித்துவிட்டானே - சோபிதா
மீண்டும் வந்திட்டா பிறந்திங்கு.....

உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:


கரம்பொன், ஊர்காவற்றுறை,

அன்பு அப்பா, அம்மா, அம்மம்மாமார், அக்காமார், தங்கைமார், அன்ரிமார், மாமாமார்.

(38011)(26-16-15)


"இன்னல்கள் போக்கியெங்கும்
இருளகற்றி ஒளிபரப்ப இகமீதில்
தோன்றிய இத்தீபத்திருநாளில்"

....உங்கள் அன்புக்குரியவர்களுக்கு
தீபத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்வுற
சுடர் ஒளி, உதயன் பத்திரிகைகள்
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் நிறுவனத்துடன்
இணைந்து வழங்கும் 'தீபாவளி வாழ்த்து அட்டை'
07-11-2004 அன்று
வெளிவரும் சுடர் ஒளி மற்றும் உதயன்
வார இதழ்களுடன் இலவசமாக வழங்கப்படும்
என்பதை வாசகர்களுக்கு
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.
உங்கள் பிரதிகளை முன்கூட்டியே அருகிலுள்ள
பத்திரிகை விற்பனையாளரிடம்
பதிவு செய்துகொள்ளுங்கள்.




உதயன் Srilanka Insurance சுடர் ஒளி

Uthayan Graphics

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் 30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும் விஞ்ஞானக் கண்காட்சி

திங்கள் (01.11.2004) முதல் செவ்வாய் (02.11.2004) வரை

ஊடக அனுசரணை உதயன்

அனுசரணை SAAMSTECH


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீரப்பன் மரணம் குறித்த சர்ச்சைகள்: கொலையா? பதில் தாக்குதலா?

**120** கொலைகள் செய்த -
200 யானைகளைக் கொன்ற -
176 வழக்குகளில் சிக்கிய -

சந்தன மரக்கடத்தல் வீரப்பனை, அதிரடிப் படையின் தலைவர் விஜயகுமாரின் குழு சுட்டுக்கொன்றுவிட்டது குறித்து, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பெருமகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். தனது நீண்ட நாள் கனவுகளில் ஒன்று நிறைவேறிவிட்டது இதனால் என்று மகிழ்ந்ததோடு நில்லாமல், தனது கனவை நனவாக்கிக் காட்டிய 752 அதிரடிப்படையினருக்கும் -

பதவி உயர்வு -
வீட்டு மனை பட்டா -

ரூபாய் 3 லட்சம் ரொக்கப் பரிசு ஆகியவைகளையும் அறிவித்திருக்கிறார் அவர் -

அது மட்டுமின்றி, சென்னையில் நேரு விளையாட்டரங்கில் மாபெரும் விழா நடத்தி, அதிரடிப்படையினர் அனைவரையும் பாராட்டிப் பரிசளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

தொலைந்தது வீரப்பன் தொல்லை; அகன்றது மலைவாழ் மக்களின் துயரம் என்று எல்லா ஏடுகளிலும் கொட்டை எழுத்துக்களில் பல்வேறு தலைப்பிட்டு வீரப்பன் முடிவு குறித்துச் செய்திகளையும் விமர்சனங்களையும் பக்கம் பக்கமாய் வெளியிட்டபடியே இருக்கின்றன.

தொலைந்தது வீரப்பன் தொல்லை; அகன்றது மலை வாழ் மக்களின் துயரம் என்பதில் பாதி உண்மைதான் இருக்கின்றது.

தொலைந்தது வீரப்பன் துயரம் என்பதை எல்லோரும் வரவேற்றுப் பாராட்டி மகிழ்ச்சியும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், மலைவாழ் மக்களுக்கு துன்ப துயரம் அளித்தது யார் என்பதை மட்டும் அவர்கள் என்ன காரணத்தினாலோ அடையாளத்துக்காக ஓரிரண்டு நிகழ்வுகளைக்கூட சுட்டிக்காட்டவில்லை.

'இந்தியா டுடே' ஆங்கில வார ஏட்டில், பிரசன்னா ராஜன் எழுதியுள்ள கட்டுரையில் பூடகமாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கின்றார். அமெரிக்க அதிபர் புஷ் மாதிரி கலாசார அழிவு வேலையை வீரப்பன் செய்யவில்லை.

யானைத் தந்தங்களுக்கு வீரப்பனால் ஆபத்து உண்டு -

சந்தன மரத்துக்கு ஆபத்து உண்டு -

பாதுகாப்புப் படையினருக்கு ஆபத்து உண்டு -

ஆனால், கலாசாரத்துக்கு ஆபத்தோ, அழிவோ வீரப்பன் தொல்லைகளால் ஏற்பட்டதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார் அவர்! அதே ஏட்டில் வெளிவந்துள்ள இன்னொரு செய்தி விமர்சனத்தில் -

"கொள்ளையடித்த பணத்தை, மலைவாழ் மக்களுக்கு உதவி செய்ததினால் அந்த மக்கள் மத்தியில் வீரப்பன், ராபின் ஹூட் மாதிரி என்ற நம்பிக்கை உருவாகி இருந்தது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகவே, தொலைந்தது வீரப்பன் தொல்லை என்று மகிழ்பவர்கள், வீரப்பனின் ஆளுகைக் குட்பட்டிருந்த வனப்பகுதிகளுக்கு வெளியே இருக்கும் அகில இந்திய மக்களின் கருத்தும் மகிழ்ச்சியும் வரவேற்புமாக இருக்கலாம். ஆனால், மலைவாழ் மக்களின் அதாவது வீரப்பன் நடமாடிய வனப்பகுதியில் உள்ள ஆதிவாசிகளின் மகிழ்ச்சிக்குக் காரணம் தொலைந்தது வீரப்பன் தொல்லை என்பதால் ஏற்பட்டதல்ல. மாறாக, வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் இருமாநில அதிரடிப்படையினரும் அப்பாவி மக்களுக்கு இழைத்த கொடுமைகளும் சித்திரவதைகளும் வீரப்பனின் மரணத்தால் இனி நிகழாது என்ற நிம்மதி, ஆறுதல் காரணமாக ஏற்பட்ட மகிழ்ச்சியே.

அதிரடிப்படையினர், மலைவாழ் மக்களுக்கு எத்தகைய கொடுமைகளை, இன்னல்களை இழைத்தார்கள் என்பதை அறிய யாரும் சிரமப்பட்டு ஆதாரங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை.

பி.யூ.சி.எல். மற்றும் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம் ஆகியவைகளால் அதிரடிப் படையினர் வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் காட்டுப்பகுதி மக்களுக்கு ஏற்படுத்திய கொடுமைகளை மனித உரிமைக் கமிஷன் மூலமாக, போராடிப் போராடி பொலீஸாரின் அத்துமீறல்களை விசாரிக்க, சதாசிவம் விசாரணை கமிஷனை நியமிப்பதில் வெற்றி பெற்றும், கமிஷன் முன் சாட்சியமளித்த ஆதிவாசி ஏழை மக்கள், அதிரடிப்படையினரின் அடக்குமுறை, கற்பழிப்பு, சித்திரவதை போன்றவற்றை கண்ணீரும் கம்பலையுமாக கூறிய சாட்சியங்களே போதுமானது.

ஏறத்தாழ 80 இற்கும் மேற்பட்ட ஆதிவாசி மக்கள், வீரப்பனுக்கு உடந்தையாய் இருந்தார்கள் என்றுகூறி தடாச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டதும், அவர்கள் 9 ஆண்டுகாலம் தீர்ப்புக்காக, காத்திருந்து சிறையில் அனுபவித்த கஷ்டங்களுக்கும் இறுதியில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான புகார்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்ததுமே ஆணித்தரமான சாட்சியம் ஆகும். ஆகவே மலைவாழ் மக்கள் வீரப்பனின் தொல்லை ஓய்ந்தது என்பதற்காக மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுவது முழு உண்மையலல. வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் பொலீஸார் நடத்திய, அட்டூழியங்கள் இத்துடன் ஓய்ந்து போகும்; ஒழிந்துபோகும் என்கிற மகிழ்ச்சியும் நிம்மதியுமே அவர்களுக்கு வீரப்பன் மரணத்தால் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த இருபதாண்டு காலத்திற்கும் மேலாகப் பொலீஸார், நூற்றுக்கணக்கான மலைவாசி மக்களைப் பிடித்து,

"நீதானே வீரப்பனுக்கு உணவுப் பொருள் கொண்டு போனது?" "நீதானே வீரப்பனுக்கு மருந்து வாங்கிக்கொடுத்தது"



"நீதானே பொலீஸ் நடமாட்டம் பற்றி வீரப்பனுக்குத் தகவல் கொடுத்தது" என்று பல்வேறு குற்றங்கள் கூறி, அவர்களைத் தரதரவென்று இழுத்து, பொலீஸ் வானில் ஏற்றி 'வேர்க் ஷொப்' என்ற சித்திரவதைக் கூடத்திற்கு இட்டுச்சென்றனர்.

"சொல்லு வீரப்பனின் மறைவிடத்தைச் செல்லு" என்று சொல்லொணாக் கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள். எனினும், ஏன் ஒருவர்கூட வீரப்பனைப் பிடிக்க, பொலீஸாருக்கு ஒத்துழைப்புத் தரும் வகையில் செயற்பட முன்வரவில்லை.

வீரப்பனால் அவர்களுக்கு எந்தவிதக் கொடுமையும் இல்லை. வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரால், பொலீஸார் நடத்திய கொடுமைகளைக் கண்டே அஞ்சினார்கள்; அதிரடிப்படையினரை வெறுத்தார்கள். அதனால் தான் அவர்களது ஒத்துழைப்பு பொலீஸாருக்குக் கிட்டவில்லை. வீரப்பனைப் பிடித்துக் கொடுத்தாலோ அல்லது இருப்பிடம் பற்றித் தகவல் கொடுத்தாலோ 5 கோடி ரூபாவுக்கு மேல் பரிசு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தும், ஆதிவாசி மக்கள் அந்தப் பணத்திற்கு ஆசைப்படாததற்கு என்ன காரணம்?

இப்போது வீரப்பன், விஜயகுமார் விரித்த வலையில் சிக்கி வீழ்ந்துவிட்டதற்கு என்ன காரணம்? 'இந்தியா டுடே' அதற்கான காரணம் ஒன்றைக் கூறி இருக்கின்றது.

"அதிரடிப்படையின் தலைவராக தேவாரம் பொறுப்பு வகித்தபோதும் மலைவாழ் மக்களுக்கு அவர் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் ஆதிவாசிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. அதனாலேயே அந்தக் கோபத்தினாலேயே அவர்கள் வீரப்பனுக்கு எதிராகச் செயற்பட விரும்பவில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறது அது.

அதனால்தான், வீரப்பனைக் காட்டுக்குள் வைத்துப் பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. காட்டுக்குள்ளிருந்து வெளியே கொண்டு வந்து, நகர்ப்புறத்திலே வீரப்பன் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதே சரியாக இருக்கும் என்று விஜயகுமார் திடமாக நம்பினார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை.

தீவிரவாதிகள் என்ற பெயரால், அதிரடிப்படையினரையே வீரப்பனுக்கு நெருக்கமாக்கி, வீரப்பனின் கண் சிகிச்சைக்காக ஓர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போக வீரப்பனை சம்மதிக்க வைத்து, பொலீஸ் வானை அம்புலன்ஸ் வானாக மாற்றி அதிலே வீரப்பன் குழுவினரை அமரவைத்து, காட்டுக்கு வெளியே கொண்டு வந்து, என்கௌண்டர் என்ற பேரால் கதையை முடித்துவிட்டார்.

எனினும் 'என்கௌண்டர்' நடைபெறவில்லை. வீரப்பனை ஏற்கனவே பிடித்துவிட்ட பொலீஸார், வீரப்பன் குழுவினர் தங்களுக்குத் தேவையான விவரங்களைச் சொல்ல மறுத்துவிட்டதால் கொன்றுவிட்டார்கள். ஆகவே, 'என்கௌண்டர்' என்பது நாடகம், நம்பமுடியாது என்று ஒரு கருத்தும் பலபேரிடம் நிலவுகிறது.

அது 'கௌண்டர்' சாவு அல்ல. ஏற்கனவே திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலைதான் என்பதற்கு அவர்கள் கூறும் காரணம் வருமாறு:-

வீரப்பன் குழுவினரை ஏற்றி வந்த அம்புலன்ஸ், பொலீஸாருக்குச் சொந்தமான வான். அந்த வானை ஓட்டிச் சென்றவரும் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒரு பொலீஸ்காரர்தான்.

அப்படியானால், அது அம்புலன்ஸ் வான் தான். அது ஆஸ்பத்திரிக்குத்தான் செல்கிறது என்று நம்பி ஏறி, பயணித்துக்கொண்டிருந்த வீரப்பன் குழுவிற்குப் பின்னால் போய் 'சரண் அடைந்துவிடு' என்று வீரப்பன் பயணித்த வானை நிறுத்தி உத்தரவிட வேண்டிய அவசியம் என்ன?

சரணடையச் சொன்னோம், அவர்கள் சுட்டார்கள், நாங்களும் திரும்பிச் சுட்டோம் என்பது நம்பும்படியாக இல்லை.

பொலீஸ் வானை, பொலீஸ் டிரைவர் ஜோராக ஓட்டிச் சென்று ஒரு காவல் நிலையத்தின் முன்போ அல்லது மஜிஸ்திரேட் வீட்டின் முன்போ நிறுத்தியிருக்க வேண்டியதுதானே!

அந்த இடத்தில் பொலீஸாரை ஏராளமாகக் கொண்டு வந்து வீரப்பன் பயணித்த வானை முற்றுகையிட்டுப் பிடிக்க வேண்டியதுதானே.

பொலீஸ்காரர் ஓட்டிய பொலீஸ் வானில் அது ஆஸ்பத்திரியின் அம்புலன்ஸ் என்று வீரப்பன் குழு நம்பினாலும், பொலீஸாரை பொறுத்தவரையில் வீரப்பன் குழுவினரைக் கைதுசெய்து பொலீஸ் வானில் ஏற்றிவிட்டதாகத்தானே அர்த்தம்?

கைதுசெய்யப்பட்டவர்களை உடனடியாக மஜிஸ்திரேட் முன்பு ஆஜர்ப்படுத்த வேண்டும் என்ற சட்டவிதிக்கு மாறாக, ஏற்கனவே கைதாகிவிட்டவர்களை சரண் அடையும்படி ஏன் சொல்ல வேண்டும்?

அதற்கு அவர்கள் சம்மதிக்காமல் சுட்டதால் திரும்பிச் சுட்டோம் என்று 'என்கௌண்டர்' நடநததாக ஏன் கூறவேண்டும்? என்று கேட்கிறார்கள் அவர்கள்.

அதுகுறித்து 'வீக்' ஆங்கில வார ஏடு வெளியிட்ட யூகம் இப்படிப்பட்ட சந்தேகத்தை வலுப்படுத்துவதாக இருக்கிறது.

"வீரப்பன் குவித்து வைத்திருப்பதாக கூறப்படும், கோடிக்கணக்கான ரூபாய்களை வீரப்பன் எங்கே மறைத்து வைத்திருக்கிறான் என்ற கேள்விக்கு அவர்கள் பதிலளிக்காததால் அவர்களை சுட்டுக்கொன்று விட்டார்கள். வீரப்பனுக்கு ஒரு கண்ணில் விழியே இல்லை என்பதும், மற்றவர்களின் மரணமும் தலையில்பட்ட குண்டடியால்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதாலும் இந்தச் சந்தேகம் உறுதியாகிறது. குண்டடிபட்ட அவர்கள் சடலங்களைப் பார்த்தபோது, எல்லோருக்கும் தலைப்பகுதியில் ஒரே ஒரு குண்டு துளைத்திருப்பது தெரிகிறது. அதுவும் தவிர சடலங்களைப் புதைக்கக்கூடாது, எரித்துவிட வேண்டும். என்று பொலீஸார் காட்டிய வேகமும் சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது" என்று தகவல் வெளியிட்டிருக்கிறது 'தி வீக்'!

'என்கௌண்டர்' பற்றித் தகவல் வெளியிட்ட விஜயகுமார், பொலீஸாருக்கு இலேசான காயங்களே ஏற்பட்டன என்கிறார். அதிரடிப்படையின் அதிகாரிகளில் ஒருவரான மோகன் நிவாசோ 'ஒரு பொலீஸ்காரருக்குப் பலத்த காயம்' என்கிறார். இதிலும் முரண்பாடே தொடர்கிறது என்கிறது அந்த ஏடு.

கட்டுரைத் தலைப்பே, வீரப்பன் கொலையா? என்கௌண்டரா? என்பதுதான்.

எது எப்படி இருப்பினும், வீரப்பனை உயிரோடு பிடிக்கப் பொலீஸார் விரும்பவில்லை. ஜெயலட்சுமியால் பொலீஸாருக்கு ஏற்பட்டிருக்கின்ற கஷ்டங்களைவிட அதிகமாக வீரப்பனின் வாக்கு மூலத்திலும் பொலீஸாருக்குக் கஷ்டம் வரலாம் என்ற பயத்தில் ஏற்கனவே அவனை கொன்றுவிட்டார்கள். பின்னர் 'என்கௌண்டரில்' அவர்கள் சுட்டார்கள். நாங்கள் திரும்பிச் சுட்டோம் என்கிறார்கள். அது முழுமையாக நம்பும்படியாக இல்லை என்பதே பெரும்பாலோரின் கருத்து. அதை உறுதிப்படுத்துவதாகவே 'வீக்'கின் கட்டுரையும் அமைந்திருக்கிறது.

# போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றி உயிரிழப்புக்களைத் தவிர்க்க முயலுங்கள்

## சைக்கிள் செலுத்துநர்களுக்கு தமிழீழ காவல்துறை அறிவுறுத்து

கிளிநொச்சி,நவ.1

ஏ-9 வீதியில் அண்மைக்காலமாக இடம் பெற்ற வீதி விபத்துக்களில் துவிச்சக்கர வண்டி செலுத்துநர்களே பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றி வீணான உயிரிழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

துவிச்சக்கரவண்டி செலுத்துநர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மைக்காலத்தில் ஏ-9 பிரதான வீதியில் ஏற்பட்ட விபத்துக்களில் துவிச்சக்கர வண்டி செலுத்துநர்கள் சிக்குண்டு உயிர் இழப்பு, உடைமை இழப்பு என்பன ஏற்பட்டதை அறிவீர்கள்.

இவ்விபத்துக்களில் இருந்து மக்களை காபபாற்றும் பணியில் நாம் இரவு பகல் என்றும் பாராது கடமை செய்வதையும் கண்டுள்ளீர்கள். இவ்விபத்துக்கள் நடப்பதற்குக் காரணம் ஏ-9 பிரதான வீதியின் அகலம் குறைவும், இவ்வீதியால் வரும் பல ஆயிரக்கணக்கான வாகனங்களின் வேகமும் ஆகும்.

இவ்விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு துவிச்சக்கர வண்டி செலுத்துநர்களாகிய நீங்கள் வீதியின் விதிமுறைகளை கடைப்பிடித்து நடக்கவேண்டும். வீதியின் விதிமுறையென கூறும்போது துவிச்சக்கர வண்டி செலுத்தும்போது வீதியின் இடதுபக்கமாக செலுத்தல்வேண்டும். முந்திச் செல்லும்போது வலதுபக்கமாக முந்திச் செல்லுதல் வேண்டும்.

வீதியில் துவிச்சக்கர வண்டியை செலுத்தும்போது இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ பக்கம் பக்கமாக செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். வீதியில் துவிச்சக்கர வண்டியைச் செலுத்தும்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களையோ அல்லது இன்னொரு துவிச்சக்கர வண்டியையோ பிடித்துக் கொண்டு செல்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

நீங்கள் துவிச்சக்கர வண்டியில் கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கு நுழையும் போது உங்கள் துவிச்சக்கர வண்டியை கிளை வீதியில் நிறுத்தி பிரதான வீதியில் வலதுபக்கம் இருந்து வரும் வாகனத்தையும் இடது பக்கம் இருந்து வரும் வாகனத்தையும் செலல அனுமதித்தபின் துவிச்சக்கர வண்டியை பிரதான வீதிக்குள் இடையூறு இன்றி வீதியின் விதிமுறைக்கேற்ப செலுத்துதல்வேண்டும்.

நீங்கள் பிரதான வீதியிலிருந்து கிளை வீதிக்கோ அல்லது கிளை வீதியிலிருந்து பிரதான வீதிக்கோ செல்லும்போது செல்லும் திசைக்கேற்ப நூறு அடிக்கு முன் சைகையை தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டி செலுத்தும்போது முன் பக்கத்தில் வெள்ளை நிற வெளிச்சத்தையும் பின் பக்கத்தில் சிவப்பு நிற வெளிச்சத்தையும் அல்லது சிவப்பு நிற தெறிகல்லையும் பாவித்தல் வேண்டும்.

துவிச்சக்கர வண்டியை செலுத்தும்போது முறையான கட்டுப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் பொருள்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்தல்வேண்டும். துவிச்சக்கர வண்டி செலுத்தும்போது மது அருந்திவிட்டு செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும். இவற்றை கடைப்பிடித்து துவிச்சக்கர வண்டியைச் செலுத்தவேண்டும் என்றுள்ளது. (ஏ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

01 - 11 - 2004 HAPPY BIRTHDAY



வருணன், அச்சுவேலியைச்
சேர்ந்த

திரு.திருமதி தவக்குமார் – தவறஞ்சினி

தம்பதிகளின்

செல்வப் புதல்வி

செல்வி சாகித்தியா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (01.11.2004) திங்கட்கிழமை தன்னுடைய அச்சுவேலியிலுள்ள வருணன் இல்லத்தில் வெகுகுதூகலத்துடன் விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி சாகித்தியாவை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், சித்தப்பாமார், சித்திமார், தாத்தாமார் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் சீருஞ்சிறப்புமாய் வாழவேண்டும் என்று வீரபத்திரப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றனர்.



வருணன்,
அச்சுவேலி.

திரு.செ.தயா (மாமா).

(38160) (24-14-19)


# 2 முன்னாள் அமைச்சர்கள், 4 அதிகாரிகள் வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை

சமுர்த்தி நிதிமோசடி வழக்குத் தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் இருவர் மற்றும் நான்கு அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளிச்செல்வதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி நிதிக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா, மகளிர் விவகாரத்திற்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் அமரா பியசிறி ரத்னாயக்காவுக்கும் -

மொனராகலை கெமிசரணய அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் நில்மினி விஜயகோன், இந்நிதியத்தின் செயலாளர் சன்ஜே புளத்சிங்கள, அதே நிதியத்தின் பொருளாளர் அனுமா குமாரி ஹேரத், இரத்னபுரி சமூக அபிவிருத்தி நிவாரண செயற்றிட்டத்தின் தலைவி மேகவதி தாபுறு ஆகிய அதிகாரிகளுக்கும் -

எதிராகவே வெளிநாடு செல்வதற்கு எதிரான இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டப் பிரதம நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன இந்த உத்தரவை விடுத்தார்.

மோசடித் தடுப்புப் பிரிவுப் பொலீஸார் நீதிமன்றில் சமர்ப்பித்த அந்தரங்க அறிக்கையைப் பரிசீலனை செய்ததன் பின்னர் இந்த உத்தரவைக் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு விடுத்தார் நீதிவான்.

தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றில் எதிர்வரும் எட்டாம் திகதி சமர்ப்பிக்குமாறு பொலீஸாரை அவர் பணித்தார்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டுமாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார் நீதிவான் குசல சரோஜினி வீரவர்த்தன. (க-3)


## வீடு விற்பனைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, கேணியடி வைரவர் கோயிலடி அருகில் வீடு, வளவு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. நேரில் சந்திக்கலாம். இரு இடங்களில் தொடர்புகொள்ளலாம்.

பேபி ஸ்ருடியோ
அளவெட்டி.

(38173) T.P.: 021 222 5348 (24-14-46)


## ஓட்டோ தடம்புரண்டதில் சாரதி படுகாயம்!

தென்மராட்சி,நவ.1

வேகமாக வந்த முச்சக்கரவண்டி பாலத்தில் நடுகைசெய்யப்பட்டிருந்த கம்பத்துடன் மோதி தடம்புரண்டதில் அதன் சாரதி காயமடைந்தார்.

கடந்த வியாழனன்று மாலை புத்தூர் வண்ணாத்திப் பாலத்தில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதியான பளை, கரந்தாயைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சுகிஷன் (வயது 20) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-117)


## தவறிவிட்டது

திறப்புக்கோர்வை, மூக்குக்கண்ணாடி மற்றும் ஆவணங்கள் அடங்கிய கறுப்பு நிறக் கைபை யாழ். நகரில் ஸ்ரான்லி வீதி, கோயில் வீதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் இல.127, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(38174) T.P.: 021 222 7242 (24-14-46)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 625 |
| திகதி | 29-10-2004 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5032211-5048088

லக்கினம் தனுசு

வெற்றி இலக்கங்கள்

20 34 42 48

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் ரூபா. 17,85,400/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,51,762 | 10/- | 35,17,620/- |
| 2.இலக்கங்கள் | 32,338 | 20/- | 6,46,760/- |
| 1.இல + லக்கினம் | 31,905 | 30/- | 9,57,150/- |
| 2.இல + லக்கினம் | 2,915 | 100/- | 2,91,500/- |
| 3.இலக்கங்கள் | 852 | 500/- | 4,26,000/- |
| 3.இல + லக்கினம் | 90 | 5,000/- | 4,50,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | 4,19,871 | - | 78,19,280/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 78,19,280/-

தொடர் இல. 4065560 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 02ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வித்த அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5044888-5-40
5036276-9-41
5045631-5-06
5036965-1-42
5043416-8-13


# ஆறாம் மாத நினைவஞ்சலி



மலர்வு 11 - 04 - 1937

உதிர்வு 08 - 05 - 2004

அமரர் கந்தையா தருமலிங்கம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கக்கிளை)

அகன்றது மாதங்கள் ஆறு
ஆறவில்லை இதயங்கள்
இதயம் உருகி விழிதாழ்த்தி
கண்ணீர் மல்கி நிசப்தமாகின்றோம்
உங்கள் நினைவுடன்...

உங்கள் பிரிவில் என்றும் துயருறும்
குடும்பத்தினர்.

(சி-38601) (24-14-46)



வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி
சந்தைகள் இறைச்சிக் கடைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - 2005

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 2004-11-09 நண்பகல் 12.00 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 2004-11-10 முற்பகல் 11.30 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: 2004-11-10 நண்பகல் 12.00 மணி
04. கேள்வித் தொகை, கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றிற்குக் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.
05. மேலதிக விவரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.
06. கேள்விப் படிவங்களின் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைப்பதுடன், மறுபிரதியினை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத் தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச் சந்தை | 1,100,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02. நெல்லியடி மீன் சந்தை | 80,000.00 | 2,000.00 | 250.00 |
| 03. கோவிற் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 15,000.00 | 3,500.00 | 250.00 |
| 04. கொட்டடிச் சந்தை | 2,200.00 | 500.00 | 250.00 |
| 05. நெல்லியடி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் | 183,200.00 | 10,000.00 | 250.00 |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 07. நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.2 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.3 | 46,300.00 | 500.00 | 250.00 |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை | 216,900.00 | 3,000.00 | 250.00 |
| 10. கோவிற் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 122,300.00 | 3,000.00 | 250.00 |
| 11. கோவிற் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 15,000.00 | 500.00 | 250.00 |
| 12. கொட்டடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 33,900.00 | 500.00 | 250.00 |
| 13. நெல்லியடி பழைய சந்தை | 50,000.00 | 3,000.00 | 250.00 |
| **உடுப்பிட்டி உப அலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 330,100.00 | 5,000.00 | 250.00 |
| 15. அந்திரான் சந்தை | 13,400.00 | 500.00 | 250.00 |
| 16. நவிண்டில் சந்தை | 4,500.00 | 500.00 | 250.00 |
| 17. உடுப்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 222,800.00 | 2,000.00 | 250.00 |
| 18. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக் கடை | 5,000.00 | 500.00 | 250.00 |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 77,100.00 | 3,000.00 | 250.00 |
| 20. உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 41,800.00 | 500.00 | 250.00 |
| **கட்டைவேலி உப அலுவலகம்** | | | |
| 21. துன்னாலை வடக்கு சந்தை | 600.00 | 500.00 | 250.00 |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 32000.00 | 500.00 | 250.00 |
| 23. அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக் கடை | 22000.00 | 500.00 | 250.00 |

திரு.ஏ.எம். ஜோசெப்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி.
26.10.2004.

(சி-38598) (26-14-46-24)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் அளப்பரிய பங்களிப்பினால்தான் விடுதலைப் போராட்டம் வலிமை பெற்றது

## எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உரை

பரந்தன்,நவ.1

எமது இதுவரைகால விடுதலைப் போராட்டத்துக்கு மக்கள் வழங்கிய அளப்பரிய பங்களிப்பும் அவர்களின் தியாகங்களுமே இந்தப் போராட்டத்தை வலிமையடையச் செய்தது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய்.

கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற எழுச்சிப் பேரவையின் புதிய நிர்வாகிகள் தெரிவில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 32 வருடங்களாகத் தமிழீழப் போராட்டம் எமது மக்களின் சுதந்திரத்திற்காக நடத்தப்பட்டு வருகிறது. இதற்காக எமது மக்கள் நிறையவே பங்காற்றியுள்ளார்கள். இதன் காரணமாகவே எமது போராட்டம் வலுப்பெற்றது.

இப்போது ஏற்படவிருக்கும் காலம் சமாதானத்திற்கான காலம். சிங்கள இனமும் நாமும் பேசி எமது மக்களுக்கான ஒரு சுதந்திர சமதர்மமான ஒரு நாட்டைப் பெறவேண்டும. இதற்காகவே நாம் ஓர் இடைக்கால நிர்வாகத்தைக் கேட்கிறோம். சமாதானத்துக்கான பேச்சுக் காலமே இது. மாறாக இதனை யாரும சமாதானம் என்று கருதக்கூடாது.

மக்களின் தியாகங்களால் வலுப்பெற்று வளர்ந்து நிற்கின்ற எமது போராட்டத்தைப் பார்த்து அரசு வியந்து நிற்கின்றது; அதிர்ந்து போயிருக்கின்றது.

இந்த நிலையில், நாம் அனைவரும் எமது தேசத்தைக் காப்பாற்றி வளங்களைப் பாதுகாத்து விடுதலையை வென்றெடுப்போம் - என்றார்.

கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஏ.வீகே.மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினைத் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்ய்யும், தேசியக் கொடியினைக் கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபனும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து இந்நிகழ்வில் வரும் மாவீரர் நாள் நிகழ்வு தொடர்பாகவும் தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்தநாள் நிகழ்வுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன. (4-352-203)

## தீ விபத்தில் யுவதிக்கு எரிகாயம்

ஸ்கந்தபுரம்,நவ.1

எரிந்துகொண்டிருந்த அரிக்கன் லாம்பிற்கு மண்ணெண்ணெய் விட்டபோது தீப்பற்றி எரிந்து யுவதி ஒருவர் படுகாயமடைந்த சம்பவம், அண்மையில் ஸ்கந்தபுரத்தில் நடைபெற்றது.

ஸ்கந்தபுரம் மத்தியைச் சேர்ந்த க.ஜெயந்தினி (வயது 17) என்பவரே மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

எரிந்துகொண்டிருந்த அரிக்கன் லாம்பிற்கு மண்ணெண்ணெய் விட்டசமயம் அவர் அணிந்திருந்த நைலோன் ஆடையில் தீப்பற்றியது. இதனால் அவருடைய கழுத்து, கைகள், முகம் என்பன பலத்த எரிகாயத்திற்குள்ளாகின. இத்தீயை அணைக்க முற்பட்டவர்களுக்கும் எரிகாயங்கள் ஏற்பட்டன.

எரிகாயங்களுக்குள்ளான யுவதி உடனடியாக அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் பின்னர், மேலதிகச் சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (4-381-204)

# முள்ளியவளை கிழக்கு மக்களுக்கு பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் உதவி

ஒட்டுசுட்டான்,நவ.1

முள்ளியவளைப் பிரதேச பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் 'எக்கோ', 'கெயர்' ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் முள்ளியவளை கிழக்குக் கிராமத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டங்களின் மூலம் அப்பகுதியில் மூன்று பொதுக் கிணறுகளையும், 25பேர் பயன்படுத்தக் கூடிய மலசலகூடங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

அத்துடன், அப்பகுதியிலுள்ள 22 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளும், சிறுதானியப் பயிர்ச்செய்கையாளர்கள் 20பேருக்கு சிறுதானிய உள்ளீடுகளுடன் விவசாய உபகரணங்களும், வீட்டுத்தோட்டம் செய்யும் 15 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட உள்ளீடுகள் மற்றும் உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. (4-341-203)

## வட்டக்கச்சிப் பிரதேச எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வு

வட்டக்கச்சி,நவ.1

வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

அப்பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆ.காண்டீபன் ஆகியோர் உரையாற்றுவர். (4-405)

## ஆசிரியர் தினவிழா

புதுக்குடியிருப்பு,நவ.1

முல்லைத்தீவு, பெரியகுளம் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆசிரியர் தினவிழா கடந்த 6ஆம் திகதி அதிபர் சற்குணசீலன் தலைமையில் நடைபெற்றது.

பெற்றோர், பழைய மாணவர் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவில் பேச்சு, கவிதை, பாடல்கள் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (10-353-202)

## பழைய மாணவன் கணனி அன்பளிப்பு

வட்டக்கச்சி,நவ.1

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திற்கு அதன் பழைய மாணவனான லண்டனில் வசித்து வரும் சிவகுரு விஷ்ணுபாலன் கணனித் தொகுதியொன்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கையளிப்பு நிகழ்வு கடந்த 28ஆம் திகதி வித்தியாலய முதல்வர் சி.சந்திரராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கண்டாவளை ம.வி. அதிபர் சி.சிறீதரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆ. ஸ்ரீரங்கநாதன் மற்றும் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். (4-405)




# சோரன்பற்றில் 50 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் அமைக்க உதவி

பரந்தன்,நவ.1

பளை, சோரன்பற்று கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு 'சேவா லங்கா' நிறுவனத்தினர் தலா 16ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான தற்காலிக கம்பி வீடுகளினை அமைத்துக்கொடுத்துள்ளனர்.

அத்துடன் 3ஆயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத்தளபாடங்கள் மற்றும் பயன்தரும் பழமரக்கன்றுகள், தென்னங்கன்றுகள், தேக்கு மரக்கன்றுகளையும் வழங்கியுள்ளனர்.

இவற்றை வழங்கும் நிகழ்வில் 'சேவா லங்கா' அதிகாரியான இளங்கோ, கிராம சேவையாளர் புவனராசா மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.(4-352-203)

# கிளி. எழுச்சிப் பேரவைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

பரந்தன்,நவ.1

கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட எழுச்சிப் பேரவையின் செயலாளர் ஏ.வி.கே.மாணிக்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பார் சஞ்சய், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மற்றும் கோட்ட, ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

புதிய நிர்வாகத் தெரிவில் கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளராக சு.பசுபதிப்பிள்ளையும், துணைச் செயலாளராக வ.தியாகராசாவும், பொருளாளராக ஏ.வி.கே.மாணிக்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுடன் 8 பிரதேச உறுப்பினர்களும் 4 துறைசார் அதிகாரிகளுமாகப் 15 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (4-352-202)

# விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெற்று விபரீதங்களைத் தடுப்போம்!

**தற்போது அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை கிளிநொச்சி மருத்துவசங்கம் மேற்கொண்டிருக்கின்றது. அதனையொட்டி மேற்படி சங்கம் வெளியிட்டிருக்குமு அறிக்கையினை இங்கு முழுமையாகத் தருகிறோம்.**

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் அவலச்சாவுகள் தொடர் கதைகளாகவே எப்போதும் இருக்கின்றன. போர் நடைபெற்ற காலப்பகுதியில் விமானக்குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள போன்றவற்றின் மூலம் அவலங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன.

இப்போது போர் ஓய்ந்துவிட்டதால் அவலச் சாவுகளுக்கு தற்காலிகமாகவேனும் முடிவு கிடைக்கும் என்று நம்பியிருந்த மக்களுக்கு ஏமாற்றமே எஞ்சிப்போனது.

அதாவது இப்போது அவலச சாவுகள் வட பகுதியில் வீதி விபத்துக்களின் வடிவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. நாளாந்தம் பத்திரிகைகளைப் பார்த்தால் வீதி விபத்துக்கள் தொடர்பான செய்திகள் ஏராளம். இந்த விபத்துக்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூகத்தில் அதன் தாக்கத்தைக் குறைப்பதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உச்சக்கட்டமாகப் பணியாற்றவேண்டிய கால கட்டம் இது.

கடந்த 2 தசாப்தங்களாக யுத்தம் காவுகொண்டிருந்த எமது பிரதேசங்கள் 2 ஆண்டுகளாக சமாதானத்தில் மெல்ல தளிர்விட்டு விருட்சமாக வர எத்தனித்து நிற்கின்றது.

யுத்தங்களும், இடம்பெயர்வுகளும், அழிவுகளும் காட்சி தந்த எமது வாழ்விடங்கள் மெல்ல புதியவைகளாக பரிணமிக்கத் தொடங்குகின்றன. உள்ளூரினுள்ளும், வெளியிடங்களிலும், வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்த மக்கள் தத்தம் வாழ்விடங்களில் குடியேறி வருகின்றனர். மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடாது. அழிவுகளும், உயிரிழப்புக்களும் இனி வேண்டாம் என்ற பிரார்த்தனையோடு குடியேறுகின்ற எமது மக்களிடையே ஒரு யுத்தத்தில் இழந்த இழப்பிற்கு ஈடு இணையாக -

★ வீதி விபத்துக்கள், உயிரிழப்புக்கள், காயங்கள், பொருளாதார நட்டங்கள்.

★ தற்கொலை முயற்சிகள், மரணங்கள்

★ கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள்,

★ பாம்புக்கடி.

என்பன அண்மைக்காலமாக மிக வேகமாக கூடி வருகின்றன. இவை எதிர்காலத்தில் மருத்துவத்துறைக்கு பெரும் சவாலாக அமையக் கூடும் எனவும் சந்தேகிக்கவேண்டியுள்ளது.

தற்காப்பு தடுப்பு முறைகளைச் சரிவரச் செயயாது வெறுமனே வைத்தியசாலைகளில் சிகிச்சையளித்து அல்லது மரண விசாரணை மேற்கொண்டு பயனில்லை.

"வருமுன் காப்போம்" என்பது மருத்துவத்தின் மகுட வாக்கியம். அதாவது வெள்ளம் வருமுன் அணைபோடுதல் வேண்டும்.

இங்கு நாங்கள் குறிப்பிடுகின்ற நான்கு விடயங்கள் ஆரோக்கியமான கலந்துரையாடல். அதற்கு பின்னான செயற்றிட்டங்கள் என்பவற்றின் மூலம் கட்டுப்படுத்த அல்லது இவற்றின் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு உதவும்.

இங்கு நாம் முதலாவது விடயமாக வீதி விபத்துக்களைக் குறைப்பது அல்லது தடுப்பது தொடர்பான விடயத்தை கருத்திற் கொளவோம்.

### வீதி விபத்துக்களை அதிகரிக்க காரணங்கள் என்ன?

★ சமாதானத்தின்பின் அதிகரித்த வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பனவற்றின் பாவனை.

★ A-9 வீதி குறிப்பிட்ட நேரத்திற்கு மூடப்படுவது.

★ வாகனங்கள் அதிகரிப்பிற்கேற்ப

அ. வீதிகள் சீரிவர நீள, அகலங்களுடன் புனரமைக்கப்படாமை.

ஆ. புனரமைக்கப்பட்ட வீதிகளில் காணப்படுகின்ற பள்ளங்களும், திட்டுக்களும் அதாவது சமச்சீராக வீதிகள் அமையாமை.

இ. வீதிகள் கிரவல் கொண்டு புனரமைக்கப்படுகின்றமை.

★ வேகமான வாகனங்கள் கிழப்புகிற தூசி, புகை மண்டலம் துவிச்சக்கர, மோட்டார் சைக்கிள், பாதசாரிகள் கண்ணை மறைத்தல் இத்துடன் சுவாச தொற்று நோய்கள், ஆஸ்துமா கூடி வருகின்றமை.

★ விபத்துக்களின் போது கிரவல், கற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பலத்த காயங்களை ஏற்படுத்தல்.

★ வீதிகளில் பாதசாரிகள் சென்று வருவதற்குரிய பாதைகள் அமைக்கப்படாமை.

★ பிரதான வீதிகளை தவிர உள் வீதிகள் புனரமைக்கப்படாமை.

★ பிரதான வீதிகளிற்கு சமனாக சமாந்தரமாக வேறு வீதிகள் அமைக்கப்படாமை.

★ கிளிநொச்சி புதிய நகர்த்திட்டம் அமுல்படுத்தப்படாமல் A-9 வீதியின் இரு பகுதியையும் அண்டியதாக அனைத்துக் காரியாலயங்கள், வாணிப நிறுவனங்கள் வங்கிகள் உருவாக்கப்பட்டுள்ளமை.

★ பொது மக்கள் இன்றும் இரண்டு வருடங்களிற்கு முன்னர் கிளிநொச்சி நகர் இருந்தது போன்ற எண்ணத்துடன் வீதிகளில் செல்கின்றமை.

★ பொது மக்களிற்கு சரிவர போக்குவரத்து விதிமுறைகளைச் சொல்லிக் கொடுக்காமை.

★ நீண்டதூரம் பயணிக்கின்ற வாகனங்களைச் செலுத்துகின்ற சாரதிகளுக்குப் போதிய ஓய்வின்மை.

★ சாரதிகளிற்கு இடையில் ஏற்படுகின்ற ஓட்டப்பந்தயம்.

★ வாகன அனுமதிப்பத்திரமின்றி சாரதிகளாக கடமையாற்றுதல்.

★ மோட்டார் வாகனங்களைக் கடன் அடிப்படையில் விற்றல்.

★ தெரு மின்விளக்குகள் இன்மை.

★ சாரதி தவிர்ந்த ஏனைய அனுபவமற்றவர்கள் வாகனங்களைச் செலுத்துதல்.

★ சம்பளத்திற்கு அமர்த்தப்பட்ட வாகனச் சாரதிகள் பொறுப்பற்று வாகனங்களைச் செலுத்துதல்.

★ பாவனைக்கு உதவாத வாகனங்களின் பாவனை.

★ சாரதிகள் மது போதையில் வாகனங்களைச் செலுத்தல்.

★ பொது மக்கள் மத்தியில் காணப்படுகின்ற விரக்தி, வெறுப்பு, ஏனோதானோ என்ற மனப்பாங்குகள்.

★ வீதிகளில் காணப்படுகின்ற கட்டாக்காலி நாய்கள், ஆடு, மாடுகள்.

★ வீதிகளில் சமாந்தரமாக செல்கின்ற சைக்கிள் ஓட்டுநர்கள்.

★ மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்வோர் தலைக்கவசம் அணியாமை.

★ பேரூந்துகளில் அளவுக்கதிகமாகப் பயணிகளை ஏற்றுதல்.

★ பாரவூர்திகளின் கூரைமீது இருந்து பயணித்தல்.

★ பொறுத்தமற்ற காலங்களில் பாரிய பாலங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்திருத்தல்.

★ மோட்டார் சைக்கிள்களின் விலைகுறைவு.

★ வேகக்கட்டுப்பாட்டிற்காக வீதிகளின் குறுக்கே போடப்படுகின்ற அணைகள்.

★ புகையிரத மார்க்கமான போக்குவரத்து ஆரம்பிக்கப்படாமை.

★ இரவு வேளைகளில் மின்விளக்குகள் இன்றி பயணிக்கும் வாகனங்கள்.

மேற்படி விடயங்களே தற்போது அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்களிற்கு காரணமாக வீதி விபத்துக்களால் பாதிக்கப்படுகின்றவர்களின் வாக்கு மூலங்களில் இருந்து அறிய முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தரமான கொங்கிறீற் கல், பூச்சாடிகள், சகலவிதமான கிறில் கற்கள், லுவேஸ் கற்கள், கம்பித்தூண் என்பன [illegible] நதமாகவும் சில்லறையாகவும் விற்பனை[illegible]. குறைநத கட்டணத்துடன் குறிப்[illegible] இடத்திற்கு லொறி, டிராக்டர் மூலம் ஏற்றி இறக்கித் தரப் படும். தொடர்பு: [illegible]தன், வீரசிங்கம் வீதி, மீசாலை கிழக்கு, [illegible]லை. (கமலாம்பிகை வித தியாலயம் அரு[illegible] T.P.: 077 6550962. (37969)

13 ஜி [illegible] தொடர் இலக்கமுடைய தனிப்பட்ட பா[illegible]னையில் உள்ள LANCAR CAR (வெள்ளை நிறம்) விற்பனைக்குண்டு. (A/C) தொடர்பிற்கு: இல.99, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. T.P.: 0777 241392. பார்க் கும் நேரம் 3 p.m. இற்குப் பின்னர். (38163)

### கோழிக்குஞ்சு விற்பனை

நத்தாருக்கு இறைச்சிக்கோழிகள் அதிக மாகத் தேவைப்படலாம். Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 08.11.2004 மாலை விநியோகிக்கப்படும். சன்னதி பாம் சென்ரர் - தொண்டைமானாறு, சிவகலை களஞ்சியம் - கோப்பாய், நல்லூர் Farm Centre - 19, முரு கேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல் லூர். (38186)

### காணி விற்பனைக்கு

மருதனார்மடம், உரும்பிராய் வீதியிலுள்ள அருள[illegible]த்திற்கு அண்மையில் கிணற்றுடன் 11 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்வன் ஸ்ரோர்ஸ், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். தொலைபேசி இல.: 077 6264161, 0314 872866. (38180)

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் இரண்டாம் குறுக்குத்தெருச் சந்திக்கு அருகில் ஒரு பரப்பு இரண்டு குளி, சுற்றுமதிலுடனும், நன்னீர்க் கிணற்றுடனும், குளியல் அறையுடன் ரொயி லட்டும் அடங்கிய வசதியுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 122/1, சப் பல் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0776 -111419 (38175)

### சேவை

55,000 அமெரிக்க விசா லொத்தர் (Green Card) விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற Internet மூலம் USA இற்கு அனுப்ப Penquin B2/F23 Bloemendhas Flats, Colombo - 13 (T.P.: 2438367, 077-3081764)(சி-38564)

### நாடக நூல்கள்

சனிக்கிழமை வானொலியில் "நம்பிக்கைத் துரோகம்" நாடகம் கேட்டீர்களா? கலாபூஷ ண[illegible]லியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாடக நூல்[illegible]. 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. எங்[illegible] நாடு, 3. நாடகம் எழுதுவது எப்படி?, 4. [illegible]னொலி நாடகம் எழுதுவது எப்படி?. (38182)

### தவறிவிட்டது

தில்லைநாதன் ராஜன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (820014014) முகமாலைக் கும் செம்மணிக்கும் இடையில் 26.10.2004இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 6258067 அல்லது 021 4590709 என்ற இலக்கத்திற்குத் தகவல் தரவும். (38157)

### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு இந்து, கிறிஸ்தவ அரச தனியார் துறைகளில் கடமை யாற்றும் மணமக்கள் உள்ளனர். தொடர்பு: கல்யாண வேலன், சர்வதேச திருமண சேவை, இல.7[illegible]சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (38172)

# அரசுக்கு நிதியை நிறுத்தக் கோரி வெளிநாடுகளில் புலிகள் பிரசாரம் செய்வதற்கு அரசே உதவுகிறது!

## இது கேலிக்கூத்து எனக் கருணா அணியின் செயலாளர் கிண்டல்

கொழும்பு,நவ.1

"தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கி னால் மட்டுமே விடுதலைப் புலிகளை ஓரங்கட்ட முடியும்.

"இந்த அரசு புலிகளுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது. ஏனைய தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்களின் மனிதப் படுகொலைகளைக் கண்டும் காணாததுபோல் செயற்படுகிறது"

- இப்படிக் குறை கூறுகிறார் கருணா தரப்பின் அரசியல் அணியின் செயலாளர் ரி.ராஜரட்ணம் (மனோ மாஸ்டர்).

கருணாவின் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும், ஈ.என்டி.எல்.எவ். உம் சேர்ந்து தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியிருப்பது தெரிந்ததே. அந்த அமைப்பின் செயலாளரே மனோ மாஸ்டர்.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான அமைப்பு ஜே.வி.பியினரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மனோமாஸ்டர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறிய தாவது:-

புலிகளின் படுகொலைகளை - செயற்பாடு களை - வெறுமனே கண்டிப்பதால் மட்டும் எதுவும் நடந்துவிடாது. அதற்கு மேலான நட வடிக்கைகளில் நாம் இறங்க வேண்டும்.

நான் ஈழப்போராட்டத்தில் ஆரம்பகாலம் தொட்டு செயற்பட்டு வருகிறேன். பிரபாகரனுட னும் நெருங்கிச் செயற்பட்டும் இருக்கிறேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் பல்வேறு அமைப்புக களை உருவாக்கிப் போராடினார்கள். ஆனால், இன்று அந்தநிலை இல்லை. புளொட் இயக் கத்தில் ஆரம்பத்தில் இயங்கிய நான், ஈ.என். டி.எல்.எவ்.கட்சியின் செயலாளராகவும் இருந் தேன். இன்று நாமும் கருணா அம்மானும் சேர்ந்து உருவாக்கிய அரசியற் கட்சியின் செயலாள ராக இங்கு வந்துள்ளேன்.

எமது கட்சியும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இணைந்து வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றி ஆட்சி செய்தபோது அதை இல்லாதொழிப்பதற்காக அப்போதிருந்த அரசு விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

ஒற்றையாட்சியின்கீழ் அதிகாரங்களைப் பகிர்ந்து அரசியல் நடத்த முயன்ற எம்மை ஒன்றுசேர்ந்து விரட்டியடித்தனர். நாம் நீண்ட காலமாக ஒதுங்கியிருந்தோம். இன்று மீண்டும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க முன்வந் துள்ளோம்.

எமக்கு ஜே.வி.பி. பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும். புலிகளுக்கு எதிரான செயற்பாடு களை மேலும் விரிவுபடுத்தும் வகையில் ஜே.வி. பியினர் தென்னிலங்கையில் தமது நடவடிக்கை களைத் துரிதப்படுத்த வேண்டும்.

நிரந்தரத் தீர்வொன்று ஏற்படுவதை விடு தலைப் புலிகள் விரும்பமாட்டார்கள்.

பிரபாகரனுக்கு வடக்கு - கிழக்குப் பகுதி கள தனது சர்வதிகாரத்துக்குக் கீழ் இருக்க வேண்டும் என்பதே ஒரே நோக்கம். விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ளவர்கள் சாகா வரம் பெற்றவர்கள் அல்லர். தமிழரின் உரிமைகள் பற்றி அவர்கள் கூறிக்கொண்டிருப்பதால் தமிழர் கள் அவர்களை நம்புகிறார்கள். தமிழர்களுக்கு உரிய தீர்வை நாம் வழங்கினால் அவர்களின் பேச்சுக்கள் எவையும் எடுபடாமல் போகும். அவர் கள் தாமாகவே ஓரங்கட்டப்பட்டு விடுவார்கள்.

புலிகளை ஒருபக்கம் விமர்சிக்கும் அரசு மறுபுறத்தில் அவர்களை ஹெலியில் பாதுகாப்பாக கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அழைதது வந்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறது.

ஆனால், விமான நிலையத்தில் நடைபெறும் செய்தியாளர் மாநாட்டில் 'இலங்கைக்கு நிதி யுதவி வழங்கக்கூடாது என்பதைச் சர்வதேசத் துக்கு வலியுறுத்துவதற்காகவே நாம் வெளி நாடு செல்கிறோம்' - என்கின்றனர் புலிகள்.

இது கேலிக்கூத்தான விடயமில்லையா?

புலிகளுக்கு எதிரான தமிழ் அமைப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்தத் தெருவில் இருந்து அடுத்த தெருவுக்குப் போகமுடியாத நிலையில் இருக்கி றார்கள்.

கொழும்பில் மட் டும் 30பேர் விடுதலைப் புலிகளால் கொலைசெய்யப்பட்டுள்ளனர்.

எனவே, வெறும் கண்டனங்களை மட்டும் செய்யாமல் சர்வதேச ரீதியில் புலிகளுக்கு எதி ரான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண் டும் - என்றார் அவர்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஜே. வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கூறிய தாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது விடுதலைப் புலிகளைத் தவிர ஏனைய தமிழ் அமைப் புகளிடம் இருந்த ஆயுதங்கள் பறி முதல் செய்யப் பட்டன. இதன் காரணமாகவே புலிகள் தமது பழிவாங்கும் படலத்தை இலகுவாகச் செய்ய ஆரம்பித்தனர்.

முதலில் இராணுவப் புலனாய்வுப் பிரி வினரைக் குறிவைத்துத் தனித்தனியாகச் சுட்டுக்கொல்ல ஆரம்பித்தவர்கள், மாற்றுத் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வரை சுமார் எழு நூறுக்கும் மேற்பட்டவர்களைச் சுட்டுக்கொன் றுள்ளனர்.

இவர்களின் செயற்பாடுகளுக்கு சாதகமாகப் பிரதான இராணுவச் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டன. பாதுகாப்பு அரண்கள் மூடப் பட்டன. 'கண்தெரியாதவர்கள் ஆட்சிசெய்யும் நாட்டில் கண்தெரிந்தவர்கள் முடமானவர்களா கக் கருதப்படுவார்களாம்.' அதைப்போன்றே விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அமைந் துள்ளன. விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் கொலைகள், ஆள்கடத்தல் போன்ற ஜனநாயக விரோதச் செயல்களை இனியும் பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. எந்த விலையைக் கொடுத்தாவது இவைகள் தடுக்கப்படல்வேண் டும். இவர்களின் இந்தச் செயற்பாடுகள் எது வரை செல்லும் என்று யாருக்கும் தெரி யாது.

எனவே, இன்று எம்முடன் கூட்டுச் சேர்ந் துள்ள கட்சிகளும் மேலும் எமக்கு ஆதரவான சக்திகளையும் இணைத்துக்கொண்டு செயலில் இறங்கவேண்டும் - என்றார்.

இந்த மாநாட்டில், ஈ.பி.டி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன், வரதர் அணியைச் சேர்ந்தவரும் போரதீவுப் பிரதேச சபைத் தலைவருமான துரைரட்ணம், ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் வண உடுவே தம்மாலோக தேரர், ஜாதிக ஹித்தேசி அமைப் பின் தலைவர் உட்படப் பலர் உரையாற்றினர். (க-3)

## முன்பள்ளிகளின் விளையாட்டு சிறப்புற நடைபெற்றது

தென்மராட்சி, நவ.1

தென்மராட்சி தெற்கில் கோவிலாக்கண்டியில் உள்ள மூன்று முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டிகள் கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தி யாலய மைதானத்தில் த.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றன.

கோவிலாக்கண்டியைச் சேர்ந்த செல்வா முன்பள்ளி, காந்தி முன் பள்ளி, மகாவிஷ்ணு முன்பள்ளி ஆகியவற்றின் சிறார்கள் இந்தப் போட்டி களில் கலந்தகொண்டனர்.

போட்டிகளில் கோவிலாக்கண்டி காந்தி முன்பள்ளி சிறார்கள் அதிக புள்ளிகளைப் பெற்று முதலிடத்தினைப் பெற்றனர்.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தைச் சேர்ந்த எம்.பாலன், கிராம அலுவலர் க.விக்னேஸ்வரராசா ஆகியோர் இதில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.(எ-117)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1931 - 07 - 02



மறைவு 1999 - 11 - 01

### நீக்கிலாஸ் செபமாலை

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்பாலே பாலூட்டி சீரிய சிறப்போடு
சிந்தையிலே அறிவு தந்தாய்!
தன் மக்கள் உயர்ந்திடவே
தரணியெல்லாம் நீ உழைத்தாய்!
என்றென்றும் உன்னை நினைத்திருப்பேன்!!

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 05-11-2004 வெள்ளிக்கிழமை உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்படும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

மனைவி
செ.ஞானப்பு.

(38181) (26-18-15-24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சரவணமுத்து முத்துக்குமாரு

(ஓய்வுபெற்ற அதிபர்)

நுணாவில் மத்தி கிராம அலுவலர் திருமதி ச.சுந்தரலிங்கம் அவர்களின் அன்புத் தந்தையார் சரவணமுத்து முத்துக்குமாரு அவர்கள் 02.10.2004 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், பிரிவால் துயருறும் குடும் பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி. (சி-38609) (24-18-15)

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
தென்மராட்சி.



முதலாம் அகவை நிறைவுசெய்து இரண்டாம் அகவையில் வெற்றிநடைபோடும்

திருமுருகன் கொம் நெற் ஸ்தாபனத்தார்கள்

27.10.2004 தொடக்கம் 31.10.2004 வரை விசேட சலுகைகளை வழங்குகின்றார்கள்.

WESTERN UNION பணப் பரிமாற்றம்

FedEx Express

உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்புகளுக்கு ரூபா 5.00 மட்டுமே

அனைத்துவிதமான தொலைபேசி அட்டைகளையும் விசேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச.முன்பாக)

Tel - 021 222 7560
Fax - 021 222 7310
E.mail :- thirumuruglan@lycosmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான வீதியை மேவி வெள்ளம் பாய்கிறது

# மண்டைதீவுக்கான போக்குவரத்து எந்நேரமும் தடைப்படும் அபாயம்

மண்டைதீவு,நவ.1

தொடர்ந்து பெய்துவரும் மழை, வீதிகளில் ஏற்பட்டுள்ள சேதம் மற்றும் மதகுகளில் ஏற்பட்டுள்ள உடைவுகள் காரணமாக மணடைதீவுப் பிரதேசத்துக்கான போக்குவரத்து தடைப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக மண்டைதீவில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மண்டைதீவு வழிப்பிள்ளையார் கோவிலுக்கு வடக்கில் ஓடைக்கடல்களான மான் ஓடை, மட்ட ஓடை, கரையோர ஓடை, பனையடிக்காட்டு ஓடை என்பன காலநிலை மாற்றம் காரணமாகப் பெருக்கெடுத்து வீதியை மேவிப் பாய்கின்றன. இதனால் வாகனப் போக்குவரத்துத் தடைப்படுவதுடன், வீதியும் சேதமடைகின்றது.

மானோடையில் உள்ள ஏழு கண்பாலம் (மதகு) இடிந்து விழும் தறுவாயில் உள்ளது. இதன் இரு கரையோரத்திலும் தடிகள், கம்புகள் நட்டு பாதுகாப்பளிக்கப்பட்டுள்ள போதிலும், அவை மாரிகால நீரோட்டத்திற்குத் தாக்குப்பிடிக்குமா என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மண்டைதீவு அம்மன் கோவில் சந்தியில் வீதிக்குக் குறுக்காக வைத்துள்ள நீர்போக்கும் குழாய் உடைந்துபோய் உள்ளது. அத்துடன், வயல் வெளியூடாக அமைக்கப்பட்டுள்ள மணல் வீதி சேறும் சகதியுமாக மாறியுள்ளது.

அம்மன் கோயில் வீதி அண்மைக்காலமாகப் போக்குவரத்துக்குப் பாவிக்கப்படாது வயல் வெளியூடாகவே குடியிருப்புப் பகுதிக்கான மினிபஸ் சேவை நடைபெற்று வந்தது. மழைநீர் தேங்கியுள்ளதால் இந்தத் தற்காலிகப்பாதையும் தடைப்பட்டுள்ளது.

போக்குவரத்தில் உள்ள இடர்பாடுகள் பல முறை சுட்டிக்காட்டப்பட்ட பொழுதும் நீண்டகாலமாகச் சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கரிசனை காட்டவில்லையென இந்தப் பகுதி மக்களும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கடும் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-88)

## முன்பள்ளிகளுக்கு நூல்வழங்கும் விழா

வடமராட்சி, நவ.1

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளிகளுக்கான 'அரும்புகழின் கீதங்கள்' என்னும் நூல் வழங்கும் விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கரணவாய் பொன்னம்பலம் மகாவித்தியாலயத்தில் சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இந்நூலின் அறிமுகவுரையை யாழ்.செயலகக் கணக்காளர் கே.கமலேஸ்வரன் நிகழ்த்துவார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா, வடமராட்சி முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை. சத்தியசீலன், எழுத்தாளர் தெணியான் ஆகியோர் உட்படப் பலர் சிறப்புரையாற்றுவர்.

இந்நூல்களின் பிரதிகள் வடமராட்சி வலயத்திலுள்ள முன்பள்ளிகளுக்கு இலசவசமாக வழங்கப்படும். (எ-173-204)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மயிலிட்டி கலைமகள் பாடசாலையை தொடர்ந்தும் உடுவிலில் இயக்க வசதி

வலிகாமம் தெற்கு,நவ.1

மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தைத் தற்காலிகமாக இயங்கிவரும் காணியில் தொடர்ந்து இயங்கவைக்க வசதியாக மேற்படி காணி லண்டன் சிவயோக நிறுவனத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டி கலைமகள் வித்தியாலயம் கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இயங்கி தற்பொழுது உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள தனியார் காணியொன்றில் இயங்கி வருகின்றது.

இந்தக்காணியின் உரிமையாளர்கள் காணியை விற்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டபோது, மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனை அணுகி, அவரூடாக லண்டன் சிவயோகம் இந்து அறக்கட்டளையிடம் தமது பாடசாலையின் அவல - அந்தரிப்பு நிலையினைத் தெரியப்படுத்தி இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து லண்டன் சிவயோக இந்து அறக்கட்டளையினர் மேற்படி காணியை விலைகொடுத்து வாங்கி பாடசாலை தொடர்ந்தும் அக்காணியிலேயே இயங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

மேற்படி இந்தப் பாடசாலை மீண்டும் தமது சொந்த இடத்தில் சென்று இயங்க ஆரம்பித்ததும் மேற்படி காணியில் சிவயோகம் அறக்கட்டளையினர் ஆச்சிரமம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளனர்.

மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சிவயோகம் அறக்கட்டளை அங்கத்தவர்களாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (எ-152)

# சனசமூக நிலையங்களில் தகவல் சேகரிப்புப் பெட்டி நிறுவ அறிவுறுத்து

வலிகாமம் தெற்கு, நவ.1

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் சனசமூக நிலையங்கள் யாவும் தகவல் சேகரிப்பு பெட்டி ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும் என பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் அறிவித்துள்ளார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் பிரதேச வளர்ச்சி, அபிவிருத்தி போன்றவற்றைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இத்திட்டங்களை சனசமூகநிலையங்களின் நிர்வாகத்தினரும் அதனோடு இணைந்துள்ள மக்களும் உடனுக்குடன் அவற்றைப் பற்றி அறிந்து நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.

எனவே, ஒவ்வொரு சனசமூக நிலைய நிர்வாகமும் சிவப்பு நிறத்திலான தகவல் சேகரிப்புப் பெட்டியொன்றினை அமைத்துக் கொள்ளவேண்டும்.

தகவல் பெட்டிகளை அமைப்பதனூடாகக் கடிதத் தொடர்புகள் எமது தூதுவர் மூலம் உடனுக்குடன் சேர்ப்பிக்கப்படும். அத்துடன், திட்டங்களையும் உடனுக்குடன் அமுல்படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஆகவே, இத்தகவல் பெட்டிகளை இவ்வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அமைத்துக்கொள்ள வேண்டும் என பி.விக்டர் அறிவித்துள்ளார். (எ-152)

# யாழ்.மாநகர எல்லைப் பகுதியில் நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்தில் தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக யாழ்.மாநகர சபையின் எல்லைப்பகுதிகளில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகப் பொது மக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபை எல்லைப்பகுதியில் உள்ள வீதிகள் சில சேதமடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. சேதமடைந்த நிலையில் வடிகால்கள் சிலவும் காணப்படுகின்றன.

யாழ.புல்லுருவிக்குளம் அருகில் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி வீதியிலும், குருநகர் மவுன்கார்மல் வீதியில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வடிகாலும் தற்போது பொது அமைப்புக்களால் செப்பனிடப்பட்டு வருகின்றன. இவ்வேலைகளைப் பூர்த்திசெய்யக் கால தாமதமாவதனால், கிடங்குகளில் மழை நீர் தேங்கிக் காணப்படுகின்றது. இதனால் நுளம்பு பெருக வாய்ப்பு உருவாகியுள்ளது.

யாழ் நகரில் சில இடங்களில் டெங்கு நுளம்பின் பரவல் உள்ளதாக யாழ்.மலேரியா தடுப்பு இயக்கம் அண்மையில் நடத்திய ஆய்வு மூலம் தெரியவந்துள்ளதாகவும் யாழ்.மலேரியாத் தடுப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்நுளம்புப் பெருக்கம் காரணமாக யாழ். நகரில் இயங்கும் அரச அலுவலகங்களில் கடமைபுரியும் ஊழியர்களும் மிகுந்த நெருக்கடிக்குள்ளாகின்றனர் என்றும் கூறப்பட்டது. (எ-51)

# காரைநகரில் கட்டாக்காலி கால்நடைகளினால் பயிர்கள் அழிக்கப்படுவதாக முறைப்பாடு!

காரைநகர்,நவ.1

காரைநகர் பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் கட்டாக்காலி மாடுகளினால் பெரும் பயிரழிவு ஏற்பட்டுவருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக விவசாய நிலங்களைச் சுற்றிப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் -

அவை இவ்வாண்டு புனரமைக்கப்படாமையாலும், கால்நடை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்க்காமையாலும் இவ்வாறு பெரும் பயிரழிவு ஏற்பட்டுவருவதாகவும் - கூறப்படுகின்றது.

கால்நடை வளர்ப்போர் அவற்றைக் கட்டி வளர்ப்பதற்கும், அதனை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-73)

# கொட்டும் மழையின் மத்தியிலும் சிறப்புற நடந்த சைவத்திருமுறை விழா

வலி.தெற்கு,நவ.1

உடுவில் கல்விக்கோட்ட சைவத்திருமுறை விழா கடந்த புதன்கிழமை கொட்டும் மழையின் மத்தியிலும் தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலையில் சிறப்புற நடைபெற்றது.

உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.


காலை எட்டு மணிக்கு கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து திருமறைச்சுவடிகள் மற்றும் சமயகுரவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்றோரின் திருவுருவப் படங்கள் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்திய சகிதம் விழா மண்டபத்திற்கு எடுத்துவரப்பட்டன.

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் செ.செல்வராசாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து சிவஸ்ரீ பரமசிவக்குருக்கள், ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தம் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினர்.

பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்தலைவர் க.தேவராஜா, சத்தியசாயி சமித்தி இணைப்பாளர் எஸ்.ஆர்.சரவணபவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஸ்கந்தவரோதயக்கல்லூரி உபஅதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், சைவசமய பாட சேவைக்கால ஆசிரியர் சைவப்புலவர் கந்த சகதிதாசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நீதிச் செய்யுள் மனனம், திருமுறைப் பண்ணிசை தொண்டுபடு செயன்முறை, கதாப்பிரசங்கம், புராணபடனம், சைவசமய பொதுஅறிவு ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.(எ-152)




நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் யாழ்.மருத்துவ பீட சமுதாயத்துறை மாணவர்கள் நடத்திய இலவச திருமணப் பதிவு அண்மையில் காக்கை தீவு முத்தமிழ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மருத்துவ பீட மாணவன் சிவஞானம் றஜீவ் ஒருவருக்கு திருமண அத்தாட்சிப் பத்திரத்தை வழங்குவதை யும் படத்தில் காணலாம். லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அருகில் காணப்படுகின்றனர். (8)




# குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க யுனிசெவ் நிறுவனம் நிதியுதவி

யுனிசெவ் நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 15 பாடசாலைகளில் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளனர்.

மேற்படி திட்டத்திற்கென 22 லட்சத்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கச்சாய் அ.த.க.பாடசாலை, மிருசுவில் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் அ.த.க.பாடசாலை, விடத்தற்பளை கமலாசினி வித [illegible] சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம் ஆகியவற்றில் தண்ணீர்த் தாங்கிகள் அமைத்து மோட்டார் மூலம் குடிதண்ணீர் வழங்கவும்-

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, நாவற்குழி மகாவித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றில் தண்ணீர்த்தாங்கிகள் அமைத்து நீரிறைக்கும் இயந்திரம மூலம் குடிதண்ணீர் வழங்கவுமென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த 75 பாடசாலைகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் விற்பனைக்கு

Net Cafe க்குரிய முழுத் தளபாடங்களும் (புத்தம் புதியவை) உடன் விற்பனைக்கு உண்டு.
அத்துடன், இரண்டு தொலைபேசிப் பெட்டிகளும் (Cubicle) (புதியவை) விற்பனைக்கு இருக்கின்றன.
நேரில் வந்து பார்வையிடலாம்.

**தொடர்பு:**
இல.347, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 0777 283824, 021 222 3729 (சி-38619)(29-43-15-45)


## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரியவரும்
வாணிரெக்ஸ் (யாழ்ப்பாணம், சாவகச்சேரி) உரிமையாளருமாகிய



**சுப்பிரமணியம் செல்வராசா**

அவர்களின் திடீர் மறைவு எமக்குப் பெரும் மனவேதனையைத் தருகின்றது. அவரது இழப்பால் பரிதவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.* (சி-38622)(32-43-15-45)

உரிமையாளர்
அல்பா மிக்சர்.


## தேவை

எமக்குப் பின்வருவோர் வேலைக்குத் தேவைப்படுகின்றனர்.
★ மருந்து விற்பனையில் அனுபவம் பெற்ற பெண் விற்பனையாளர்.
★ பயிற்சி பெற்ற பெண் தாதியார்.
★ O/L, A/L படித்த பெண்கள்.
தாதிப் பயிற்சி பெற விரும்புகின்றவர்கள்.
தொடர்புகளுக்கு நேரில் வரவும்

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் கவுஸ் அருகே) (சி-38621)
08, இராமையார்செட்டியார் லேன், யாழ்ப்பாணம்.


## நன்றி நவிலல்

எமது பாசமிகு தந்தையார்
**சுப்பிரமணியம் செல்வராசா**
(செல்வம் பான்சி, வாணிரெக்ஸ் உரிமையாளர்)

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்ததும் ஏக்கமடைந்து, துடித்த உள்ளங்களுக்கும், உடன் ஓடோடி வந்து சகல வழிகளிலும் உதவி செய்தும், எமக்கு ஆறுதல் கூறியும் இறுதிக்கிரியை முடியும்வரை எம்மோடு கூடவே இருந்து எம்மைத் தேற்றியமைக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தார் சார்பில் மனமார்ந்த நன்றியறிதலைக் கூறிக்கொள்கின்றோம்.

கென்ஸ்மன் லேன், டச்சு வீதி,
சாவகச்சேரி. (38179)(38-43-15-45)

செல்வம்
குடும்பத்தார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்மகிழ 1913 - 10 - 13

கண்நெகிழ 2004 - 10 - 02



## அமரர் சரவணமுத்து முத்துக்குமாரு

அன்பென்ற வார்த்தைக்கு அடிக்கல் நாட்டி
நேசக் கால்பதித்து எம் நெஞ்சில் நிலைத்துவிட்ட
தெய்வமே!
எம் குடும்பமென்ற கோயிலின் குன்றாத தீபமே!
எமைப் பிரிந்து நீர் தொலைதூரம் சென்றாலும்
சென்ற இடத்தில் நீர் சிந்தை சிதறாது - இறையோடு
இன்புற்றிருக்க இறைஞ்சுகிறோம் இறை தனை!

02.10.2004 அன்று தகனத்தீயில் காற்றோடு கலந்த எம் குடும்பத் தலைவர் அமரர் சரவணமுத்து முத்துக்குமார் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.11.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால், இத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
கண்டிவீதி, சாவகச்சேரி. (38191)(38-43-15-45) குடும்பத்தினர்.

# தொலைத் தொடர்பு நிலையத் திருட்டு; சந்தேகத்தில் ஒருவர் கைது

கோண்டாவில் பகுதியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் பொருள்களைத் திருடியதாகக் கூறப்படும் ஒரு நபரை கோப்பாய் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

கோண்டாவில் பகுதியில் கடந்த வாரம் தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றில் கையடக்கத்தொலைபேசி, 'காட்' வகைகள் உட்பட 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் தொலைத்தொடர்பு நிலையத்தின் முன் கதவை உடைத்து திருடப்பட்டிருந்தன.

பின்னர் கடையின் உரிமையாளரும், கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலான குழுவினரும் எடுத்த நடவடிக்கையின் பயனாக சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். இதேவேளை மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புள்ள பலரைத் தேடி பொலீஸார் வலைவிரித்துள்ளதாக கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (3-180)

## வடக்கு -கிழக்கில் உள்ள சுகாதாரத்துறை ஊழியர் இன்று சுகவீன லீவில்

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்களிலும் கடமைபுரியும் எழுதுநர்கள், சாரதிகள், களஞ்சியப் பொறுப்பாளர் உட்பட சகல தரத்திலுமுள்ள சேவையாளர்கள் இன்று திங்கட்கிழமை சுகவீன லீவை அறிவித்துக் கடமைக்குச் சமுகமளிக்காது தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதுவிடயமாகக் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் அகில இலங்கை சுகாதார சேவைச் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

ஏற்கனவே தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிறைவேற்றப்படாததை அடுத்தே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாகச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-51)

## காரைநகரில் பற்சிகிச்சை முகாம்

தேசிய வாய்ச்சுகாதார தினத்தை முன்னிட்டு காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கு நடமாடும் பற்சிகிச்சை முகாம் ஒன்று இன்று திங்கள் முதல் எதிர்வரும் 5ஆம் திகதிவரை நடைபெறும். இப்பகுதி பாடசாலைகளில் இதற்கு முன் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போது இனம் காணப்பட்ட மாணவர்களுக்கே தற்போது இச்சிகிச்சை வழங்கப்படவுள்ளது என்றும் -

இனம்காணப்பட்ட சகல மாணவர்களும் இச்சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ள சமுகமளிக்க வேண்டும் எனவும் - பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (3-15)

## பிற்போடப்பட்டுள்ளது

யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க நிதிக்காக 29.10.2004 ஆம் திகதியன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 10.12.2004 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.
ஊர்காவற்றுறை. (38193)

## நெல்லை சில்க் அதிர்ஷ்டம்

இந்த மாதத்திற்கான பட்டுச்சேலை அதிர்ஷ்டலாபச் சீட்டு இல.2170 நேரடியாக வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக் கொள்ளலாம்.

S.அகிலதாஸ்
உரிமையாளர்.
(சி-38623)

## சமய சந்நிதிகளில்


புலோலி மந்திகை கண்ணகை அம்மன் கோயில் லட்சார்ச்சனை இன்று திங்கட் கிழமை காலை ஆரம்பமாகி மாலை வரை நடைபெறும்.
(எ-173-204)

★ ★ ★

சித்தன்கேணி - தனுவோடைப்பகுதி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன் கிழமை 9.14 மணிககு நடைபெறவுள்ளது.
(எ-28-204)

★ ★ ★

வட்டுக்கோட்டை தெற்கு நரசிங்க விளானை வைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட் கிழமை காலை 9.20 மணி முதல் 10.25 மணி [illegible] இடம் பெறும்.
(3-161)



## இறையருள் பெற வாழ்த்துகின்றோம்


வடலியடைப்பு கலைவாணி வீதியில் அமைந்த மகா காளியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் "சக்தியின் மகத்துவம்" என்னும் பொருளில் தொடர் சொற்பொழிவாற்றி, மக்களைப் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்திய சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும்

**திரு.ஆ.கனகரத்தினம்**

அவர்கள் மேற்படி ஆலய நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். மேலும் இப்பணியில் சிறப்புற்று விளங்கவும் இறையருள் பெறவும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(38189) (43-15-45) - நிர்வாகத்தினர்


மலிவான விலையில் சிறந்த மரத்தளபாடங்களை எம்மிடம் கொள்வனவு செய்து புன்னகை மலர்ந்த முகத்துடன் வீடு செல்லவும்



**மொரட்டுவ மரத் தளபாட விற்பனையும் கண்காட்சியும்**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்
நவம்பர் 01 முதல் நவம்பர் 15 வரையில்
காலை 9.00 மணி முதல்
இரவு 9.00 மணி வரை.

மிக உயர்தர மரத் தளபாடங்கள் உங்களது வசதிக்கேற்ப விலையில் தேவையான எல்லா பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே வந்து உங்களுக்குத் தேவையான பொருள்களை ஒதுக்கிக்கொள்ளவும்.

**நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருள்களுக்கும் 2 வருட உத்தரவாதம் தயாரிப்பாளரினால் தரப்படும்.**

(38196) (32-15-45)




உ
சிவமயம்

## சங்கானை சிலம்புப்புளியடி அருள்மிகு சாமுண்டேஸ்வரி சமேத ஸ்ரீஞானபைரவர் தேவஸ்தான புனருத்தாரண நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்

**காலம்:** 01.11.2004 திங்கட்கிழமை யாகாரம்பம்
02.11.2004 செவ்வாய்க்கிழமை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் காலை 9.00 முதல் மாலை 5.00வரை.
03.11.2004 புதன்கிழமை மகாகும்பாபிஷேகம் காலை 9.00 முதல் 11 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

**கும்பாபிஷேக பிரதம குரு:-**
சிவாகமகிரியாரத்னம், சிவாகமஞானபாஸ்கரன், வேதசிவாகமஞானபானு இந்து மத குருபீட யாழ்.மாவட்ட அமைப்பாளர், சங்கானை கலாநிதி சிவஸ்ரீ சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார் அவர்கள்.

[illegible] வந்து தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

*சிலம்புப் புளியடி,*
*சங்கானை.* (38192) (43-15-45)

- ஆலய தர்மகர்த்தா
தி.இராஜதுரை குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு எதிரான அச்சுறுத்தலை நிறுத்தினால் அமெரிக்காவில் இன்னொரு தாக்குதல் இடம்பெறாமல் தடுக்கலாம்

## புதிய வீடியோ நாடா மூலம் ஒஸாமா பின்லேடன் தெரிவிப்பு

கெய்ரோ,நவ.1

முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு எதிரான அச்சுறுத்தலை நிறுத்தினால் செப்ரெம்பர் 11 ஆம் திகதியத் தாக்குதலைப் போன்ற இன்னொரு தாக்குதலுக்கு உள்ளாவதை அமெரிக்கா தவிர்க்கலாம் என்று அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தின் தலைவரான ஒஸாமா பின்லேடன் கூறியுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு 4 நாள்களுக்கு முன்பாக அமெரிக்க மக்களுக்கு அவர் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார். புதிய தாக்குதல் நடத்தப்படும் என எச்சரிக்கை எதையும் அவர் விடுக்கவில்லை.

அமெரிக்கா மீதான செப்ரெம்பர் 11 ஆம் திகதியத் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் மலைப் பகுதிகளில் மறைந்து வாழ்கிறார் எனக் கூறப்படும் பின்லேடன் ஓராண்டுக்குப் பின்பு வீடியோவில் தோன்றி அறிக்கை வெளியிட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதை அல் - ஜெஸீரா தொலைக்காட்சி வெள்ளிக்கிழமை ஒளிபரப்பியது. 5 நிமிடங்கள ஓடும் வீடியோவில் ஒரு நிமிடப் பகுதியை மட்டுமே ஒளிபரப்பியதாக அல்ஜெஸீரா தெரிவித்தது.

நீண்ட தாடி, பாரம்பரியமான வெள்ளை உடை, தலைப்பாகையுடன் அவர் காட்சியளித்தார். பின்னணியில் பழுப்பு நிற திரைச்சீலை தெரிய கைகளில் காகிதங்களுடன் ஒரு மேசை முன் நின்று அவர் அறிக்கையை வாசித்தார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்க மக்களே! உங்களுடைய பாதுகாப்பு கெரியிடமோ, புஷ்ஷிடமோ, அல்கெய்டாவிடமோ இல்லை. அது உங்கள் கைகளில்தான் உள்ளது.

எங்களுடைய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்காத எந்த நாடும் இயல்பாகவே அதனுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தையும் இராணுவ தலைமையகமான பென்டகனையும் விமானத்தைக் கடத்திச் சென்று தாக்குவதற்கு உத்தரவிட்டது ஏன் என்பதை விளக்க விரும்புகின்றேன்.

அப்போதுதான் இன்னொரு பேரழிவை எப்படித் தவிர்க்க முடியும் என்பதை அமெரிக்கர்கள் தெரிந்துகொள்ளமுடியும்.

பாதுகாப்பு என்பது மனித வாழ்க்கையில் ஒரு முக்கியமான அம்சம். சுதந்திரமான மக்கள் தங்கள் பாதுகாப்பை விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

சுதந்திரத்தை வெறுப்பதால்தான் அல்கெய்டா தாக்கியது என்று கூறி அமெரிக்க மக்களை புஷ் ஏமாற்றி வருகிறார்.

முஸ்லிம்களை அச்சுறுத்தாத நாடுகளை நாங்கள் எதுவும் செய்யவில்லை.

பலஸ்தீன, லெபனான் நாடுகளின் மக்களுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் இழைத்த அநீதிகளை எதிர்த்தே அமெரிக்கா மீது செப்ரெம்பர் 11 இல் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

1982 இல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின்போது லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உயரமான கட்டடங்கள் தகர்த்து அழிக்கப்பட்டன.

அழிந்த அந்தக் கட்டடங்களைப் பார்த்தபோதுதான் கொடுங்கோலர்களை அதே வழியில் தண்டிக்கவேண்டும; அமெரிக்காவில் உள்ள உயரமான கட்டடங்களை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் தோன்றியது.

அப்போதுதான் நாங்கள் எதை அனுபவித்தோமோ அதை அவர்களும் அனுபவிப்பார்கள். எங்கள் குழந்தைகளையும் பெண்களையும் கொல்லாமல் அவர்களைத் தடுக்க முடியும் என நினைத்தேன் என்று பின்லேடன் குறிப்பிட்டுள்ளார். (க-3)

# ஒஸாமாவின் வீடியோ நாடா பாகிஸ்தானில் கிடைத்ததாம்

அல்கெய்டா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனின் செய்தி அடங்கிய வீடியோ நாடா பாகிஸ்தானில் கிடைத்தது என அரேபியத் தொலைக்காட்சி நிறுவனமான அல் - ஜெஸீரா தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள தமது அலுவலகத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள. ஓர் உறையில் யாரோ இந்த நாடாவை வைத்துச் சென்றிருந்தார் என்றும் ஜெஸீராவின் அதிகாரிகள் கூறினர்.

இந்த வீடியோ நாடாவை ஒளிபரப்பாமல் அல் - ஜெஸீரா தொலைக்காட்சியைத் தடுத்து நிறுத்துமாறு கட்டார் அரசை அமெரிக்கா கேட்டுக்கொண்டதாக அடையாளம் தெரிவிக்க விரும்பாத அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-3)

# 8 அமெரிக்கச் சிப்பாய்கள் ஈராக்கில் உயிரிழப்பு!

பலூஜா,நவ.1

ஈராக்கில் 8 அமெரிக்கப் படையினர் கொலலப்பட்டுள்ளனர் என இராணுவ அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 9 சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதனால் இவர்கள் உயிரிழந்தனர் என்ற தகவலைத்தர இராணுவ அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

அமெரிக்கப் படையின் உதவியுடன் ஈராக்கில் அரச படையினர் பெரியதாக்குதல் ஒன்றுக்காக தயாராகிவரும் பலூஜா நகரை உள்ளடக்கிய அல் - அன்பார் மாகாணத்திலேயே இந்தப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்காக ஈராக்கில் அரச படையினர் பலூஜா நகரின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களைத் தொடர்ந்தார்கள் என இடைக்கால அரசு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்தப் பேச்சுக்களின் மூலம் நல்ல தீர்வுகள் வருவதற்கான சமிக்ஞை எதுவும் தென்படவில்லை என்று பலூஜாவில் உள்ள சுனி முஸ்லிம் மதத் தலைவர்கள் கூறினர் எனச செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-3)

# ஈராக்கில் கார்க் குண்டுத்தாக்கு: 7பேர் மரணம்; 16பேர் காயம்!

பக்தாத்,நவ.1

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள அல்-அரேபியத் தொலைக்காட்சி நிறுவனத்தின் அலுவலகத்திற்கு வெளியில் கார்க் குண்டுவெடித்ததில் 7 பேர் கொல்லப்பட்டனர்; குறைந்தது 16 பேர் படுகாயமடைந்தனர்.

அல் - அரேபியத் தொலைக்காட்சியில் பணியாற்றும் ஊழியர்கள் இடையே கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே இக்கார்க் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதை சில நிமிடங்களின் பின்னர் அல் - அரேபியத் தொலைக் காட்சியின் அலுவலகம் உள்ள அதே வளாகத்தில் அமைந்துள்ள மற்றொரு தொலைக்காட்சியான எம்.பி.சியின் செய்தியாளர் கூறியுள்ளார்.

பக்தாத்தின் மேற்கிலுள்ள மன்சூர் பகுதியிலேயே இக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அங்கு இருந்த கட்டடத்தின் முதலாவது மாடி இடிந்து ஊழியர்களின் மேல் விழுந்துள்ளது. அந்த இடத்தில் தீப்பிடித்தும் உள்ளது.

மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். (க-3)


ராஜா யாழ்ப்பாணம்

மூன்றாவது ஜனத்திரள் வாரம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்
7/G ரெயின்போ காலனி (ரீலாஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந்த், ஸ்நேகா மற்றும் பலர் நடிப்பில்




போஸ் 3ஆம் திகதி வரையும்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, (பு.நே) (C-37740)

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் சரத்குமார், ஆனந்தபாபு நடித்த
சேரன் பாண்டியன் (ரீலஸ்)
DARE DRAAVIL
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே.

இனிப்புக் கம்பனிக்கு வேலை ஆள்கள் தேவை

இனிப்பு வகை, கச்சான் அல்வா, மிக்சர் என்பன தயாரிக்க பெண் பிள்ளைகள் தேவை.
(பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்). தகுந்த சம்பளம் வழங்கப்படும் நேரில் வரவும்.
முகவரி:
பாரதி சிறுகைத்தொழில் நிலையம்
இல.19, சம்பியன் லேன், கொக்குவில் (38199)





## வீட்டுக்கிருத்திய அழைப்பு



02.10.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வம்

**அமரர் அ.கதிர்காமநாதன் (இத்தினி)**

அவர்களின் இறைவழிபாட்டு நிகழ்வுகள் இன்று (01.11.2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*காங்கேசன்துறை வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*
(38201) (32-16-17)

தங்கரத்தினம் (அப்புலிங்கம்)
மற்றும் மக்கள், மருமக்கள்

## மரண அறிவித்தல்

### நாகேந்திரக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள்

பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியர் அவர்களும் பருத்தித்துறை சிவன் கோயில் முன்னாள் ஆலயக் குருக்களும் ஆகிய நாகேந்திரக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி அம்மா பத்மநாதஐயர், பாலாம்பிகை அம்மா, குணபூசணி அம்மா, ஜெயலட்சுமி அம்மா, சிறிதரசர்மா, ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற குமாரசாமிக் குருக்கள், சந்திரதேவி சோமசுந்தர சர்மா, நாராயணக் குருக்கள், சுந்தரேஸ்வரசர்மா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (01.11.2004) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் மாலை தோதியடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.ஜயந்தன் (பேரன்)

(சி-38624)(32-16-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கல்விக்குப் பதிலாக புதிதாக மூன்று பாடங்கள்

கொழும்பு,நவ.1

அடுத்த ஆண்டுமுதல் சமூகக்கல்விப் பாடத்திற்குப் பதிலாக பூமிசாஸ்திரம், வரலாறு, குடியியல் ஆகிய பாடங்கள் அறிமுகப் படுத்தப்படவுள்ளன.

இத்தகவலை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது.

இப்பாடங்களை அறிமுகப்படுத்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வைபவம் இன்று கல்வியமைச்சின் வள நிலையத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

அடுத்த ஆண்டு தரம் 7 முதல் இப்புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

(ஐ-13)

# புலிகள் அலுவலகம் மீது கிரனேட் வீச்சு!

ஏறாவூர்,நவ.1

வந்தாறுமூலை, மாவடிவேம்பில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் பிராந்திய அரசியல் பிரிவு அலுவலகத்தின் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை 1.45 மணியளவில் புலிகளின் அலுவலகத்தின் மீது கிரனேட்டுக்களை வீசித் தாக்குதல் மேற்கொண்ட இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற வேளையில் அலுவலகத்தில் எவரும் தங்கியிருக்கவில்லை என்றும், இதனால் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும், அலுவலகக் கட்டடத்திற்குச் சேதங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு நேற்றுக்காலை நேரடியாகச் சென்ற ஏறாவூர் பொலீஸார் சேத விவரங்களைப் பார்வையிட்டனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-க-13)

# உரிமை மீறல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து எமது அமைப்பின் அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் பிற தலையீடுகள் ஏற்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படமுடியாது.

எமக்கு எதிரான இச்சம்பவத்தை நாமே கையாண்டால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். சுதந்திரமாக செயற்பட முடியாத நிலையும் ஏற்படும். அதுமட்டுமல்லாது பொதுமக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கை அற்றுப் போய்விடும்.

இச்சம்பவம் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் பொலீஸ் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் இதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

**கேள்வி:** யாழ். குடாநாட்டில் பணிபுரியும் அரச படையினர் மற்றும் பொலீஸாரினால் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். இதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப் போகிறீர்கள்?

**பதில்:** நேற்றுமுன்தினம் எம்மைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினருக்கு நன்கு விளங்கப்படுத்தி உள்ளோம்.

பொலீஸார் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள். அதேபோலவே படையினரும் மனித உரிமைகளை மீறினால் அது பாரதூரமானது. அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக சரியான தகவல்கள் தரப்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகள் எமது அதிகாரத்திற்குட்பட்ட வகையிலேயே மேற்கொள்ளப்படும்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக பிரதிநிதிகளைச் சந்தித்து யாழ். குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடியபோது கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது இராணுவம் மற்றும் பொலீஸாரால் மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்படுவது மிகவும் குறைந்துள்ளது என்றும் இது ஒரு நல்ல முன்னேற்றம் என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் பாலியல் ரீதியான, கலாசார ரீதியான, வன்முறைகள் ரீதியான பிரச்சினைகள் காணப்பட்டாலும் ஏனைய இடங்களுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

அரச படையினர் மட்டுமல்ல விடுதலைப் புலிகளாலும் மனித உரிமை மீறல் மேற்கொள்ளப்படுவதாக எமக்கு சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. ஆனால் அதில் நாம் முழுமையாக தலையீடு செய்யமுடியாது. குறிப்பாக சிறுவர்களைக் கடத்துதல், பலவந்தமாக இயக்கத்தில் சேர்த்தல் போன்றவற்றிற்கே எம்மால் நடவடிக்கைகள் எடுக்கமுடியும்.

அரச அதிகாரிகள் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யும்போது அவர்களுக்கெதிராக எம்மால் நடவடிக்கை எடுக்கமுடியும்.

அரச அதிகாரிகள் மக்களுக்கு வேண்டிய சேவையைச் செய்வதற்காகவே அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், சிலர் அதனைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர். இங்கு பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்கு வேண்டிய நிதியுதவிகளை அரசு செய்யத்தவறினால் அது தொடர்பாக எமக்கு முறைப்பாடு செய்யலாம். நாம் சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் காணாமற்போனவர்கள் பிரச்சினை என்பவை தொடர்பாக ஆராய்ந்து, அது தொடர்பான அறிக்கைகளை உரியவர்களிடம் சமர்ப்பித்துள்ளோம். அதற்கு உரியவர்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்குமாறு தூண்டுதல் கொடுப்போம் - என்றார்.

(ஐ-5)

# ஸ்ரீல.சு.க.-ஜே.வி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ள 'ஹித்தேசிய' என்ற நாட்டுப்பற்றாளர் அமைப்பு அண்மையில் இரத்தினபுரியில் நடத்திய மாநாட்டில் உரையாற்றிய விமல் வீரவன்ஸ, ஜனாதிபதியின் கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டார் எனவும் கூறப்படுகின்றது.

"ஜனாதிபதி வெறும் ஐம்பது சத நாணயத்திற்கும் கீழாகவே மதிக்கப்பட்டார். ரவி கருணாநாயக்க போன்ற முன்னாள் அமைச்சர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டார். ஜனாதிபதியின் கைப்பைக்குள் என்ன இருக்கிறது என்று ஆராயும் அளவுக்கு அமைச்சரவையில் பொம்மைபோல் ஜனாதிபதி அமர்ந்திருந்தார். இதனால் நித்திரையின்றி அவருடைய முகம் இருளடைந்து போய் இருந்தது" என்றெல்லாம் கிண்டலடித்திருந்தார் விமல் வீரவன்ஸ.

"இப்பொழுது நிறைவேற்று அதிகாரம் தன்னிடம் இருப்பதாகக் கூறுகின்றார். ஆனால், அதைக் காப்பாற்றிக்கொடுத்ததே ஜே.வி.பிதான்" - என்றும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டிருந்தார்.

விமல் வீரவன்ஸவின் இந்தக் கூற்று தனிப்பட்டமுறையில் ஜனாதிபதி சந்திரிகாவை நிந்திப்பதாக மட்டுமல்ல, ஸ்ரீல.சு.கட்சியையே ஒரு செயலற்ற அமைப்பு என்று விமர்சிப்பதாக உள்ளது என்று சீறுகின்றனர் பழுத்த சு.கவினர்.

இது தொடர்பாக விமல் வீரவன்ஸ ஜனாதிபதியிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும். அதை வெளிப்படுத்தும் வித்தில் இது தொடர்பாக அவர் பகிரங்கமாக அறிக்கை ஒன்றையும் வெளியிடவேண்டும். இல்லையேல் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக நாங்கள் அறிக்கை ஒன்றை வெளியிடுவோம். அவருடைய இரட்டைப் போக்கைக் கண்டித்தும் பிரசாரம் செய்வோம் எனப் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டிலான் பெரேராவுடன் சில அமைச்சர்களும அகில இலங்கை ரீதியிலான இளைஞர் அமைப்புகளும் இணைந்து இந்த எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-க-13)

# பணயக்கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர். மூன்று பிள்ளைகளின் தந்தையான அவர் 2003ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ஆம் திகதி குவைத்துக்குச் சாரதியா கக் கடமையாற்றச் சென்றார். கொழும்பில் உள்ள முகவர் நிலையமான அல்கீம் மூலமாக அவர் அனுப்பப்பட்டுள்ளார்.

சந்தோஷ்குமார், கிஷோகுமார், டிலான் குமார் ஆகிய மூன்று ஆண்பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் குடும்ப வறுமை காரணமாகவே குவைத் சென்றுள்ளார். அவர் மனைவி டொரின் ரீட்டா ,தனது கணவனை மீட்டுத்தருமாறு இலங்கை அரசுக்கு உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

குவைத்தில் உள்ள ஜாசிம் ட்ரான்ஸ்போர்ட் என்ற போக்குவரத்து நிறுவனத்தின் கனரக வாகனச் சாரதியாகக் கடமையாற்றிய அவர் ஈராக்குக்குச் சென்ற விடயம் பற்றித் தமக்குத் எதுவும் தெரியாது எனக் கொழும்பிலிருந்தும் அவரைக் குவைத்துக்கு அனுப்பிய முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணத்தை விடுவிப்பதற்கு வெளிவிவகார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட பிரதிநிதி, குவைத் மற்றும் லெபனானில் இருக்கும் இலங்கைத் தூதரகங்கள் ஊடாக துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

தினேஷ் தர்மேந்திரா ராஜரட்ணத்தை விடுவிப்பதற்குத் தீவிரவாதிகள் எவ்வித நிபந்தனைகளையும் நேற்றுவரை விதிக்கவில்லை. எனினும், ராஜரட்ணத்துடன் கடத்தப்பட்ட மற்றொரு பங்களாதேஷ் சாரதி இஸ்லாமிய நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றார் என அல் ஜெஸீரா தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட செய்தியில் தெரிவிக்கப் பட்டது. (ஐ-க-13-10)

# ஒஸ்லோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்புண்டா என்பதைக் கண்டறியவும் -

அதற்காகப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம், அப்போதைய அரசுக் குழுவின் பிரதம பேச்சுவார்த்தையாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், அரசுக் குழுப் பிரதிநிதியான ரவூப் ஹக்கீம் ஆகியோர் அவ்வப்போது வெவ்வேறு இடங்களில் கூடி, சந்தித்துப் பேசி வாய்ப்புகளை ஆராயவும் -

இணக்கம் காணப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

# கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் படுகொலை செய்து வருகின்றார்கள்.

இந்த துரோகிகளை இனங்கண்டு பொதுமக்கள் தகவல்களை தந்து உதவ வேண்டும் என்றும 'எஞ்சியிருக்கும் துரோகிகளை இனங்காண்போம்' என்ற தலைப்பில் அந்த துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)


NEW SCIENCE CENTRE
யாழ்நகர்.
CHEMISTRY
DAYCLASS - பிரிவு II
Mon., Wed., Fri . ⇒ 11.00 - 12.00
"ORGANIC CHEMISTRY"
Mon., Wed., Fri . ⇒ 12.00 - 1.00
By. அன்பழகன் B.Sc.
(C-38607)(38-13-16-30)

இப்பொழுது விற்பனையாகின்றது
தீபாவளி வாழ்த்து மடல்கள்
எம்மிடம் அதி நவீன டிசைன்களில்
சீவம் வாழ்த்து மடல்களும்
அழகிய இந்திய வாழ்த்து மடல்களும்
விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன!
★ கட்டிங் கார்டுகள் ★ சினிமா நட்சத்திரங்கள்
★ சுவாமிப் படங்கள் ★ பூ கார்டுகள் முதலிய பலவும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
☞ POST CARD 50/=, 100/=
Makkmilan Book Depot
No. 3, Hospital Road,
Jaffna.
Sri Kantha Book Depot
No. 165,
Power House Road,
Jaffna.
(C-38861)(33-13-16-30)

தீபாவளி வாழ்த்துக்கள்
ஈழ மண்ணில் வாழும் எம்மின மக்களுக்குத் தீபாவளி நல்வாழ்த்துக்களை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.





தென்னிந்தியாவில் இருந்து
ஐந்தாவது முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ் பெற்ற சிவபால சோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு புதுப்பலன்களை அறிவதற்கு மீண்டும் யாழ். மக்களின் வேண்டுகோளுக்கிணங்கி வருகைதந்துள்ளார்.
பார்க்கும் நேரம்: காலை 9.00 மணி - மாலை 6.00 மணி
கைரேகை மட்டும் காலை 9.00 மணி முதல் 1.00 மணிவரை
★ ஜாதகம் ★ கைரேகை ★ எண்கணிதம் ★ பெயர் ராசி ★ திருமணப் பொருத்தம் இவற்றில் பல வருட அனுபவம்பெற்றவர்.
(38112)(30-13-16)
ராஜகுருசாமி
மிலன்ஸ் மல்ரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD (Near ICRC), JAFFNA. ☎ 5867

CATWAS. COM
Computer Academy
N0.26, Somasundram Avenue, Chundukuli. T.P.:021-2223505
1. Online Diploma in Microsoft Office.
Duration-01 Month-100 Hours
2. Diploma in Hardware.
Duration-01 Month-50 Hours
3. Online Diploma in Desktop Publishing.
Duration-01 Month-50 Hours
05.11.2004ஆம் திகதியில் இருந்து 05.12.2004 வரை.
Diploma Courses
MS-Office 1750/=
DTP 2000/=
Hardware 1500/=
Web Page 3000/=
Video Mixing 2500/=
Certificate Courses
பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கும், தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்களுக்குமானது.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005
எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப் பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2005/2006 இற்கான புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டு எமது நிறுவனத்தின் 10ஆவது சிறப்பு வெற்றியாண்டு என்பதால் மாணவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்...
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்...
விண்ணப்ப முடிவு திகதி 30-11-2004
இயக்குநர்.
IIS, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
14-11-2004
இக்கல்வியாண்டு 2003/2004 இற்குரிய இறுதிப் பிரிவுகளிற்கான வகுப்புக்கள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப்பிரிவில் அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இயக்குநர்.
(சி38573)(30-13-16) IIS, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் தம்பிராசா



சேர்ச் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் தம்பிராசா நேற்று (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெயராணியின் அன்புக் கணவரும் சசி (ஜேர்மனி), மேர்சி (கனடா), கிறிஸ்ரி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிங்ஸ்லி (ஜேர்மனி), நீதிராசா (கனடா), லக்ஸ்மி (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் திஷான், டெபோறா, கிசோனா, அக்ஷியா, டிரிக்கா, ஜெமிக்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் இன்று (01.11.2004) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்று, நல்லடக்கத்திற்காக பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேர்ச் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
திருமதி த.ஜெயராணி
(மனைவி).

(38202)(30-13-16)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org